Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 24 திங்கட்கிழமை (06.04.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:13

# புதுக்குடியிருப்புப் பகுதி படையினர் கட்டுப்பாட்டில் என அரசு அறிவிப்பு

## கடும் சண்டை தொடர்வதாகவும் தகவல்

கொழும்பு, ஏப்ரல் 6

**புதுக்குடியிருப்புப் பகுதியை, இராணு வத்தினர் தமது பூரண கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.**

**விடுதலைப் புலிகளால் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கும் பொது மக்களை மீட்பதற்காக சில பகுதிகளில் கடும் சண்டை நடைபெறுவதாக -**

**53 ஆவது படையணியினரும் 58 ஆவது படையினரும் முன்னேறிச் செல்லும் பகுதிகளிலேயே கடும் சண்டை நடைபெறுவதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.**

இதேவேளை - ஐந்து முனைகளில் முன்னேற முயலும் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகளின் அணிகள் கடுமையான எதிர்த் தாக்குதலை மேற்கொண்டுள்ளன என்றும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

எனினும், புதுக்குடியிருப்புக்கு வடக்கே பாதுகாப்பு வலயம் என அரசால் அறிவிக்கப்பட்ட பகுதிகள் தவிர ஏனைய இடங்களைப் படையினர் முற்றாகக் கைப்பற்றி விட்டனர் என பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

இதேவேளை விடுதலைப் புலிகள் முற்றாக அழித்தொழிக்கப்படும் நிலையில் உள்ளனர் எனத் தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சு விடுதலைப் புலிகளுடன் நெருக்கமாக மோதல்கள் புதுக்குடியிருப்புக்குக் கிழக்கே பாதுகாப்பு வ லயத்திற்கு அருகில் இடம்பெற்றுள்ளன என்று தெரிவித்துள்ளது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறும்

யாழ்ப்பாணம், ஏப்.6

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறும் என யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெ வித்துள்ளது.

பயணம் செய்ய பதிவுகளை மேற்கொண்டவர்களை காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையப்பகுதிக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)

**க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கென உதயன் தனியாக வழங்கும் 6 பக்கங்கள் கொண்ட இலவச கல்விச் சுடர் இணைப்பிதழ் நாளை மறுதினம் வெளிவரும்.**

## தற்போது வன்னியில் நடைபெறும் போர் தமிழ் மக்களுக்கு எதிரான ஆக்கிரமிப்பு அல்ல

### இப்படிச் சொல்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஏப்.6

இன்னும் சில நாள்களில் நமது தாய் நாடு முழுமையாக பயங்கரவாதிகளிடம் இருந்து விடுபட்டுவிடும். தற்போது நடைபெறும் யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரான ஆக்கிரமிப்பல்ல. இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கொழும்பு மாவட்ட செயற்பாட்டாளர்களை நேற்று அலரிமாளிகையில் சந்தித்துப் பேசியபோதே ஜனாதிபதி மேற்கண்ட

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனைச் சரணடையுமாறு கோருகிறார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு, ஏப். 6

வன்னி, புதுக்குடியிருப்பில் பாதுகாப்பு வலயம் என அரசால் அறிவிக்கப்பட்ட பகுதிகள் தவிர மற்றைய பகுதிகள் அனைத்தும் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளது என படைத்தரப்பு அறிவித்த நிலையில், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் உடனடியாகச் சரணடைய வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த

(14 ஆம் பக்கம் பார்க்க)

## 500 மாணவர்களின் பெறுபேறுகள் தற்காலிகமாக இடை நிறுத்தம்

கொழும்பு, ஏப்.6

ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் 500 பேருடைய பெறுபேறுகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன என பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்தார். (14 ஆம் பக்கம் பார்க்க)

## ★ அரச வேலை வாய்ப்புக் குறைப்பு ★ மானியங்கள் நிறுத்தம் ★ நாணயப் பெறுமதியை வீழ்ச்சியடைய விடுவது

## சர்வதேச நாணய நிதியத்தின் கடன்பெற அரசுக்குக் கடினமான விட்டுக்கொடுப்பு நிபந்தனைகள்!

கொழும்பு, ஏப்.6

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனுதவியைப் பெறுவதற்காக இலங்கை சில கடினமான விட்டுக்கொடுப்புகளை செய்யவேண்டியிருக்கும் என இது தொடர்பாக நாணய நிதியத்துடன் பேச்சுகளை மேற்கொண்ட வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏ.எவ்.பி. தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கை நாணயத்தின் பெறுமதியை வீழ்ச்சியடையவிடுவது, மானியங்களை நிறுத்துவது, அரச சேவையில் வேலை வாய்ப்புகளை குறைப்பது போன்ற நடவடிக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் பொதுமக்களைப் பாதுகாக்கும் பணி விரைவில் என்கிறார் இராணுவத் தளபதி

கொழும்பு, ஏப்.6

வன்னியில் சிக்குண்டுள்ள பொதுமக்களை பாதுகாக்கும் பணி, நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வன்னியில் விடுதலைப்புலிகளின் மீது தொடர்ந்தும் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. புலிகள் அரசால் பிரகடனப்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சீனி, பருப்பு, உ.கிழங்கு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் புதுவருடத்துக்கு முன் உயரும்!

கொழும்பு, ஏப்.6

அரசின் இறக்குமதி வரி காரணமாக, புதுவருடத்திற்கு முன்னதாக சீனி, பருப்பு, உருளைக்கிழங்கு, வெங்காயம் உட்படப் பல அத்தியவசிய உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நிதியமைச்சர் 20 பொருள்களுக்கான 'செஸ்' வரியை அதிகரிக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார் என நுகர்வோர் விவகார அமைச்சின் செயலாளர் லலித் சில்வா தெரிவித்துள்ளார். (14 ஆம் பக்கம் பார்க்க)

### ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண

## பிரதமரும் சோனியாவும் மஹிந்தவுக்கே கடிதம் எழுதவேண்டும்; கலைஞருக்கல்ல

### எத்தனை காலம் தான் ஏமாற்றுவார்கள் என்று கேட்கிறார் நெடுமாறன்

சென்னை, ஏப். 6

இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பிரதமர் மன்னோகன்சிங்கும் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியும் கடிதம் எழுதவேண்டியது இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கே அன்றி கருணாநிதிக்கல்ல.

தமிழர் நலனுக்கு எதிராக இருக்கின்ற காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணியை மக்களவைத் தேர்தலில் வெற்றிபெற விடக்கூடாது. அவர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்.

- இவ்வாறு தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய அமைப்புகள், முற்போக்கு இயக்கங்கள் உள்ளிட்ட அமைப்புகளின் சார்பில் 'மக்களவைத் தேர்தலில் தமிழர் கடமை - கலந்தாய்வுக் கூட்டம்' திருச்சியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தப்பியோடிய கைதி மடக்கிப் பிடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ்ப்பாணத்தில் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் யாழ். சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் மதில் பாய்ந்து தப்பி ஓட முயற்சித்த வேளை சிறைச்சாலை அதிகாரிகளால் மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளார் எனத்தெரிவிக்கப்படுகிறது. (14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ. (சாதாரண) பரீட்சை; சில பாடசாலைகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்.6

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ (சாதாரண) தரப் பரீட்சை முடிவுகளை இணையத்தளம் மூலம்பெற்று பாடசாலை அதிபர்கள் வெளியிட்டுள்ளனர்.

நேற்று மாலை வரை பாடசாலை அதிபர்களால் உதயனுக்கு அனுப்பப்பட்ட சிறந்த முடிவுகள் சில வருமாறு:

யாழ். இந்து

* 9ஏ - 5பேர்- சிவகுமார் கோபிநாத் (ஆங்கில மொழி மூலம்), இளங்குமரன் கௌசிகன் (ஆங்கில மொழிமூலம்), தேவராசா கோகுலன், பரமேஸ்வரன் பாலசங்கர், சதாசிவம் கலையுகன்.

* 8ஏ - 21பேர், 7ஏ - 25பேர், 6ஏ - 33 பேர், 5ஏ - 30பேர்.

மானிப்பாய் இந்து

* இ.உமாசங்கர் - 6ஏபிசி, உ.காத்திகேயன் - 5ஏ3பிசி, றோ.ஆன்சிலி - 4ஏ4பிஎஸ்.

மானிப்பாய் மகளிர்

* தர்மினி யோகேந்திரன் - 8ஏசி, சுபமதி சிவபாதசுந்தரம் - 6ஏபி2சி, பிரமிளா இலட்சுமிகாந்தன் ஏ3பிஎஸ். (அ-10)

# காரைநகர் சிவன் ஆலய வசந்தமண்டபத்தின் திருப்பணிகளுக்கு முழு ஆதரவு வழங்கத் தீர்மானம்

காரைநகர், ஏப்.6

ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் திண்ணபுரம் சிவன் கோயிலில் வசந்தமண்டபத் திருப்பணிகளை மேற்கொள்ள பூரண ஆதரவு வழங்கும் தீர்மானம் ஒன்றை அவ்வூர் மக்கள் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளனர்.

ஆலயத்தின் திருப்பணிகளை முன்னெடுப்பது தொடர்பாக ஆராய்வதற்காக பொது மக்களுடனான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நேற்றுப் பிற்பகல் ஆலய மாணிக்கவாசகர் மடாலயத்தில் இடம்பெற்றது. அந்தக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திருப்பணிச் சபைத் தலைவர் த.சற்குணராசா தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் ஆலய தர்மகர்த்தா மு.சுந்தரலிங்கம், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், பேராசிரியர் ச.சத்தியசீலன், விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம் மற்றும் பொது மக்கள் கலந்துகொண்டனர்.

இதுவரை காலமும் கோயில் ஆதீன கர்த்தாவின் மேற்பார்வையில் திருப்பணிச் சபையால் மேற்கொள்ளப்பட்ட உள் மண்டபம், சுற்றுப்பிரகாரத் திருபணி வேலைகளுக்கு முழு ஆதரவு வழங்குவதாக பொது மக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

வசந்த மண்டபப் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்குவதாக பொதுமக்கள் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினர்.

(1-250)

# ஷெல், ஹெலித் தாக்குதல்களில் 92 பேர் பலி; 153 பேர் காயம்

## பொருள் இறக்கிக் கொண்டிருந்த கப்பல் மீது சூடு

கொழும்பு, ஏப்.6

முல்லைத்தீவில் மக்கள் பாதுகாப்பு வலயப்பிரதேசங்களான மாத்தளன், இடைக்காடு, இரட்டைவாய்க்கால், அம்பலவன் பொக்கணை, ஆகிய பகுதிகள் மீது நேற்றுப் படையினர் மேற்கொண்ட ஷெல் மற்றும் ஹெலித் தாக்குதலில் 30சிறுவர்கள் உட்பட 92பேர் கொல்லப்பட்டனர், 153 பேர் காயமடைந்தனர் என இணையத்தளங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் தொடர்பாக இணையத் தளங்களில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகளான அம்பலவன்பொக்கணை, இடைக்காடு, மாத்தளன் மற்றும் இரட்டைவாய்க்கால் பகுதிகளில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் மாலை வரை படையினர் ஆட்லறி ஷெல், பல்குழல் பீரங்கி, ஆர்பிஜி உந்துகணை மற்றும் எம்ஐ 24 ரக ஹெலி தாக்குதல்களை நடத்தினர்.

இதில் 30 சிறுவர்கள் உட்பட 92 பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 153 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் அடையாளம் காணப்பட்டவர்களின் விவரம் வருமாறு:

அருணாசலம் ரவி (வயது 37), அழகு மீனா (வயது 49), ஆறுமுகம் சசீலா (வயது 18), லோகநாதன் நிசாந்தினி (வயது 09), வைரமுத்து செல்வரத்தினம் (வயது 50), லௌசீகன்லேகா (வயது 23), விசுவலிங்கம் கனகரத்தினம் (வயது 65), பெரியாம்பிள்ளை சோபமலர் (வயது 67), ரவிசங்கர் லவநிசா (வயது 02), சத்தியானந்தன் சசிகலா (வயது 29), வடிவேலு சந்திரலிங்கராசா (வயது 51), ஐங்கரகுமார் நிதுசன வான்மதி (வயது 09), ஜேம்ஸ் அந்தோனிப்பிள்ளை (வயது 50), சின்னமணி இன்பநாதன் (வயது 47), கந்தசாமி தியாகராசா (வயது 47), தியாகராசா சங்கீதா (வயது 13), வீரசிங்கம் தர்மலிங்கம் (வயது 56), தில்லையம்பலம் திருச்செல்வம் (வயது 52), ஜோசப் வேணுசன் (வயது 05), தில்லைநாதன் சுமதி (வயது 38), லோகநாதன் ஹேமா (வயது 32), கலைவாணி (வயது 27), லோகநாதன்லோஜிதா (வயது 09), சிவதீபன் புஸ்பராணி (வயது 04), சத்தியமூர்த்தி குணாளன் (வயது 09), புலேந்திரன் விக்கினேஸ்வரி (வயது 42), சி.கலைவாணன் (வயது 27), துரைசிங்கம் (வயது 47), கணபதிப்பிள்ளை சண்முகம் (வயது 61), கஸ்தூரி (வயது 14), விஜயரத்தினம் இரத்தினராசா (வயது 44), முருகையா சிவனம்மா (வயது 64), கருணாநிதிதர்சா (வயது 22), மயில்வாகனம் குகேந்திரராசா (வயது 44), கமலநாதன் ராதிகா (வயது 23), மகேந்திரராசா கமலநாதன் (வயது 26), குகேந்திரராசா ராஜலா (வயது 05), கந்தசாமி தனுசன் (வயது 08), ஆறுமுகம் கந்தசாமி (வயது 42), சோதி (வயது 48), தர்மேந்திரன் கார்த்திகா (வயது 06), கே.தர்சன் (வயது 22), எஸ்.சிவரூபன் (வயது 06), வீ.இந்திரராஜா (வயது 40), ஆர்.தியாகு (வயது 40), கஸ்தூரி (வயது 16), வீ.துரைசிங்கன் (வயது 47), சத்தியமூர்த்தி குணாளன் (வயது 09), வினோஜா (வயது 17), கணபதிப்பிள்ளை சண்முகராஜா (வயது 58), விசுவலிங்கம் கனகரத்தினம் (வயது 65), வீரசிங்கம் தர்மசிங்கம் (வயது 52), வீரசிங்கம் இந்திரராஜா (வயது 42), சின்னமணி இன்பநாதன் (வயது 47), கந்தையா சிவபாதம் (வயது 50), சிவபாதம் மோகன்ராஜ் (வயது 25), சிவபாதம் தர்மராஜ் (வயது 23), மோகன் ராஜ் ராதிகா (வயது 24), பாலச்சந்திரன் தர் சன் (வயது 08), சத்தியமூர்த்தி குணாளன் (வயது 10), நாகலிங்கம் பாலகிருஸ்ணன் (வயது 42), மயில்வாகனம் குகேந்திரராசா (வயது 44), குகேந்திரராசா ராஜனா (வயது 13), அன்ரன் லோசன் ரேகா (வயது 03), சின்னமணி இன்பராசா (வயது 47), சசிகுமார் தேவபாக்கியம் (வயது 51), ஐங்கரன் நிருசன் (வயது 09),

(13 ஆம் பக்கம் பார்க்க)


NEW YEAR OFFER!



44,000/-

Processor 1.8 Pentium Duo Core
Biostar DG 31 Mother Board
Kingston DDR II 1 GB Ram
80 GB SATA Hard Disk
LG DVD Writer
ATX Black Casing
CRT 17" Monitor
Multimedia Keyboard
Optical Mouse
Multimedia Speaker
UPS 650 W

Free... Pen Drive Dust Cover Mouse Pad



48,500/-

Processor 2.5Pentium Duo Core
FoxConn G 31 Mother Board
160 Gb SATA Hard Disk
Kingston DDR II 1 GB Ram
Samsung DVD Writer
ATX Black Casing
LCD 17" Monitor
Multimedia Keyboard
Optical Mouse
Multimedia Speaker
UPS 650 W

Free... Pen Drive Dust Cover Mouse Pad



Processor 2.5 Pentium DuoCore
Intel DG 31 Mother Board, Kingston DDR II 1 GB Ram
160 GB SATA Hard Disk, Samsung DVD Writer
ATX Black Casing, View Sonic 17" LCD Monitor
Multimedia Keyboard, Optical Mouse
Multimedia Speaker, UPS 650 W

53,000/- Free... Pen Drive, Dust Cover, Mouse Pad



Processor 2.5
Pentium DuoCore
Intel DG 31
Mother Board
Kingston
DDR II 2GB
Ram
160 GB SATA Hard Disk
Samsung DVD Writer ATX Black Casing,
View Sonic 19" LCD Monitor
Multimedia Keyboard, Optical Mouse
Multimedia Speaker, UPS 650 W

55,000/- Free... Pen Drive Dust Cover, Mouse Pad

SUBWOOFERS

| | |
|---|---|
| Microlab 2.1 Subwoofer | - 3300/- |
| 2.1 creative SBS 380 | - 3900/- |
| 5.1 Microlab MIII 3 | - 6500/- |
| 5.1 Creative SBS A500 | - 8200/- |

MONITORS

| | |
|---|---|
| Bene / Prolink 16" LCD | - 12250/- |
| View Sonic 17" LCD | - 16250/- |
| View Sonic / Bene 19" LCD | - 17500/- |
| View Sonic 17" CRT | - 13000/- |

ACCESSORIES

| | |
|---|---|
| ATX Black Casing | - 3500/- |
| UPS 650 W | - 5300/- |
| UPS 1.2 KW (Powertree) | -10750/- |
| Power Supply | - 1600/- |
| Optical Mouse | - 450/- |
| Normal Keyboard | - 450/- |
| Card Reader | - 600/- |
| Modem | - 700/- |
| Pen Drive | |
| Capture Card | - 1500/- |
| Speaker | - 600/- |

* Warranty Value 1-2 years

MUSIC WORLD & COMPUTERS
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி.
தொலைபேசி/ஃபக்ஸ்: 021 222 6554
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)


## கண்ணீர் அஞ்சலி



எமது சக விரிவுரையாளர்
அ.இராசகுமாரன் அவர்களின்
அன்பு மனைவி

### திருமதி இ.சரோஜாதேவி

[ஆசிரியை, யாழ்.முத்துத்தம்பி ம.வி.]
அவர்களின் திடீர் மறைவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன்
துயரைப் பகிர்வதோடு அவரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஆங்கிலமொழிப் போதனைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய முன்னாள் பொருளாளர்
ஆசிரியர் க.துஷ்யந்தன்
அவர்களின் பாசமிகு தந்தை

### கதிர்காமு கந்தசாமி

அவர்கள் 04.04.2009 இல்
காலமானதையும்
ஆலய தொண்டர்சபை உறுப்பினர்
த.ஜெயந்தன் அவர்களின் பேர்த்தி



### திருமதி செல்லர் நாகம்மா

அவர்கள் 01.04.2009 இல்
காலமானதையும் அறிந்து
வேதனை கொள்வதோடு
அவர்களின் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, இறந்தவர்களின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அறுமன் கலட்டி
ஞான வைரவர் ஆலயம்,
மயிலங்காடு, ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

ஆலய பரிபாலன
சபையினர்.

## மரண அறிவித்தல்

### ஏரம்பு சின்னத்தம்பி



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஏரம்பு சின்னத்தம்பி ஆவரங்கால் மேற்கு, புத்தூரில் நேற்று (05.04.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் ஏரம்பு - சின்னப்பிள்ளையின் அன்பு மகனும் சின்னம்மாவின் அன்புக் கணவரும் பத்மாவதி, நித்தியானந்தபவானி, சித்தானந்தபவானி, சிவகுமார் (கனடா), சோமேஸ்வரி, சோமறஞ்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் கந்தசாமி (இளைப்பாறிய விவசாயப் போதனா ஆசிரியர்), செல்லத்துரை (சோதி புடைவையகம், விஷ்ணு ஹாட்வெயர்), பாலச்சந்திரன், பிரபா (கனடா), அமரர் வாமதேவன் (சிற்றி கணன் காமன்ஸ்), செல்லக்குமார் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் மயூராயினி, சிவாஜினி, சிவநந்தினி, செல்வநந்தினி, கஜணன், சிவதர்சினி, கஜன், வேதகி, ஸ்ரீரூபி, கோபிகன், சுதர்சினி, கோபிராம், உமைபாலன், ஸ்ரீகோவர்த்தனி, சனாதனி, விஸ்ணுராஜ், லக்ஷிகாஜின், மனோசன், வினோஜி, செல்வஞ்சா, சேவித் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2009) திங்கட்கிழமை ஆவரங்காலில் மு.ப.10 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: செல்லத்துரை குடும்பம்
(சோதி ரெக்ஸ் புடைவையகம், விஷ்ணுஹாட்வெயர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே பாடசாலையில் தொடர்ச்சியாக 7 வருடங்கள் பணியாற்றிய யாழ்.மாவட்ட ஆசிரியர்களுக்கு இரண்டாந் தவணையில் இடமாற்றம்

அச்சுவேலி,ஏப்.6

யாழ்.மாவட்டத்தில் ஒரே பாடசாலையில் தொடர்ச்சியாக 7 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய ஆசிரியர்களை வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யும் வேலைத்திட்டம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இரண்டாம் தவணை ஆரம்பத்தில் இவ்வாறு இடம்மாற்றம் பெறும் ஆசிரியர்கள் புதிய பாடசாலைகளில் தமது கடமைப்பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு ஏற்புடையதான செயற்பாடுகள் வலய கல்வி பணிப்பாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா கருத்துத் தெரிவிக்கையில்

''ஆசிரியர் தேசிய இடமாற்றக்கொள்கை, மாகாண இடமாற்றக் கொள்கை தொடர்பான விவரங்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன. அத்துடன் அவை தொடர்பான சுற்றறிக்கைகளும் வலயக் கல்விப் பணிப்பாளர்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக இந்த வருட முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 'கல்வி அபிவிருத்தி தொடர்பான உயர்மட்ட மாநாட்டில்' விரிவாக ஆராயப்பட்டு அனைத்துத் தரப்பினரின் கருத்துப் பரிமாற்றல்களுடனும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வலயங்களுக்கு உள்ளே ஆசிரியர் இடமாற்றங்களை மேற்கொள்ள வேண்டியது வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்குரிய பொறுப்பாகும் என்று கூறினார்.

ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக வடமராட்சி கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வராசா தகவல் தருகையில் நீண்டகாலம் ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களை இடமாற்றம் செய்வது தொடர்பான கொள்கைக்கு சகல தரப்பினரிடமிருந்தும் பூரணமான வரவேற்பு கிடைத்துள்ளது.

தொடர்ச்சியாக ஒரே பாடசாலையில் கடமையாற்றியவர்கள் என்ற வகையில் 400 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இனங்காணப்பட்டு நிரல்படுத்தப்பட்டுள்ளனர்.

ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கு அமைவாக இவர்களுக்கான இடமாற்றங்கள் வழங்கப்படுவதுடன் 2 ஆம் தவணை தொடக்கத்தில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் புதிய பாடசாலைகளில் கடமை பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு வகை செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக வடக்கு மாகாண கல்வி அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் -

தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கு அமைவாக ஆசிரியர் இடம்மாற்றம் தொடர்பான செயற்பாடுகள் வடக்கு மாகாணத்தில் முழுமையாக முன்னெடுக்கப்படவில்லை என்ற குறைபாடுகளும் புகார்களும் பல தரப்பினரிடமிருந்தும் தெரிவிக்கப்படுகின்றன.

நீண்டகாலம் ஒரே பாடசாலையில் ஆசிரியர்கள் தொடர்ந்து கடமை புரிவது என்பது புரையோடிய பழைமைவாதக் கொள்கையாகும் இது யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதில் நவீன சிந்தனை ஓட்டத்துடன் கூடிய மாற்றம் அவசியம் தேவையாகும்.

ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான கொள்கைத் தீர்மானத்துக்கு அமைவாக செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கடமைப் பொறுப்பாகும். இந்த விடயத்தில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதவிடத்து அதற்குசம்பந்தப்பட்ட வலயக்கல்விப் பணிப்பாளர் வகை கூற வேண்டியது அவசியமாகும் எனக் கூறினார். (4-11)

## புதிய மின்னிணைப்புக்கள் வழங்குவதில் தாமதம்

வடமராட்சி, ஏப்.6

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் மின்சாரம் பெறுவதற்காக ஆயிரம் விண்ணப்பதாரிகள் காத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மின்சாரம் பெறுவதற்காக நெல்லியடியில் உள்ள இலங்கை மின்சாரசபை வடமராட்சி அலுவலகத்திற்கு இவர்கள் விண்ணப்பித்து அதற்குரிய பணத்தையும் செலுத்தியுள்ளனர்.

ஆனால் மின் இணைப்பு வழங்குவதற்குத் தேவையான தூண் கொழும்பில் இருந்து வராத காரணத்தால் இந்த விண்ணப்பதாரிகளுக்கு மின்சாரம் வழங்க முடியாதிருப்பதாக பிரதேச மின்சாரசபை அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (04-236)

## சமய சந்நிதிகளில்

யாழ்பபாணம், ஏப்.6

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் ஆலயத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை பங்குனி உத்தரத் திருவிழா நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 8மணிக்கு விசேட அபிடேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகவுள்ளன. அதனைத் தொடர்ந்து. காலை 9மணிக்கு சமயச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் முற்பகல் 10மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா எழுந்தருள்வார். (201-160)

* * *

யாழ்பபாணம், ஏப்.6

காரைநகர் வாரிவளவு கற்பகவிநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை வியாவில் ஐயனார் ஆலய தீர்த்தக் கரையில் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (201-250)

* * *

வடமராட்சி, ஏப்.6

பருத்தித்துறை புலோலி மேற்கு ஆலடிப் பிள்ளையார் ஆலய பஞ்சகுண்டபஷ புனராவர்த்தன பிரதிஷ்ட மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9மணி தொடக்கம் மு.ப. 10மணிவரை நடைபெறவுள்ளது.

மேற்படி ஆலயத்தில் எண்ணைக் காப்பு சாத்தும் நிகழ்வு நாளை மறுதினம் காலை 8மணி தொடக்கம் பிற்பகல் 4மணிவரை இடம்பெறவுள்ளது. (201-236)

* * *

வடமராட்சி, ஏப்.6

மேலைப்புலோலி சொக்கன்கலட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள்ஆலய வருடாந்த பொங்கல் திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு விசேட பூசை இடம்பெற்று அன்றைய தினம் பிற்பகல் 1.30 மணிக்கு விழா நிறைவு பெறவுள்ளது. (201-236)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.6

காரைநகர்சிவன்கோயில்வருடாந்தப் பெருந் திருவிழாவின் பெரிய சப்பரத் திருவிழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று இரவு 7மணிக்கு இடம்பெறும் வசந்த மண்டபப் பூசையை அடுத்து சுவாமி பெரிய சப்பரத்தில் திருவீதியுலா வரும் காட்சி இடம்பெறும். அன்றைய தினம் சைவப் புலவர் மா.கணநாதன் நெறியாள்கையில் வட்டூர் இளைஞர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (201-250)

* * *

யாழ்பபாணம், ஏப்.6

காரைநகர் களபூமி ஸ்ரீமகாகாளி அம்பாள் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

மகா கும்பாபிஷேக பூர்வாங்க கிரியைகள் இன்று திங்கட்கிழமை விநாயக வழிபாட்டுடன் ஆரம்பமாகின்றது. எண்ணைக் காப்பு சாத்தும் நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை காலை 7மணிமுதல் பிற்பகல் 4மணிவரை இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து 9ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணி தொடக்கம் முற்பகல் 10.08 மணிவரை மகாகும்பாபிஷேகம்நடைபெறவுள்ளது. கும்பாபிஷேக கிரியைகளை ஸ்ரீலஸ்ரீ கு.சண்முகநாதக் குருக்கள் பிரதம குருவாக இருந்து நிகழ்த்தி வைப்பார். (201-250)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.6

சுழிபுரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் பங்குனிப்பூரத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5மணியளவில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் ''தளர்வறியா மனம் தரும் தாய்'' எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

* * *

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்தப் பொங்கல் விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (201-204)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ்ப்பாணம் வண்.வடமேற்கு ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (9)

* * *

யாழ்.பன்றிக் கோட்டுப் பிள்ளையார் ஆலய மணவாளக் கோல விழா நாளை மறுதினம் புதன்கிழமை காலை 7 மணியளவில் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெறவுள்ளது. (9)

## மழைநீரைக் குடிதண்ணீர் ஆக்கும் திட்டத்துக்கு பொதுமக்களிடம் போதிய வரவேற்பில்லை; அதிகாரிகள் கவலை

யாழ்ப்பாணம், ஏப்.6

மழைநீரை வடிகட்டிக் குடிதண்ணீராகப் பயன்படுத்தும் திட்டத்திற்கு அநேகமான மக்கள் அக்கறை காட்டவில்லை என தேசிய குடிநீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரி ஒருவர் கூறினார்.

தீவுப்பகுதிகளில் இதற்கென அமைக்கப்பட்ட தாங்கிகளில் மழை காலங்களில் மழைநீரைச் சேமித்தும், பின்னர் அதனை வடிகட்டி கோடை காலங்களில் குடிதண்ணீர்த் தேவைக்காகப் பயன்படுத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

எனினும்இந்த திட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டாலும் கூட மழைநீரைக் குடிதண்ணீராகப் பயன்படுத்துவதற்கு மக்கள் அதிக ஆர்வம் காட்டவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் கூடுதலாக கிணற்று நீரையே அதிகளவில் விரும்புகின்றனர் என்றும் அதனாலேயே இத் திட்டத்திற்கு போதிய வரவேற்பு இல்லை என்றும் கூறப்படுகிறது. (04-224)

## காச நோயின் தாக்கம் குடாநாட்டில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ். குடாநாட்டில் காச நோயின் தாக்கம் திடீரென அதிகரித்துள்ளதாக காச நோய்க் கட்டுப்பாட்டு மாவட்ட அதிகாரி டாக்டர் பி.யமுனானந்தா தெரிவித்தார்.

இந்த ஆண்டில் கடந்த மூன்று மாத காலப்பகுதியில் மட்டும் 21 பேர் காசநோய்க்கு இலக்காகியுள்ளனர். மொத்தம் 85 பேருக்கு சளிப்பரிசோதனைமேற்கொள் ளப்பட்டு இதில் 21பேர் காசநோயாளிகளாக இனங்காணப்பட்டுள்ளனர்.ஜனவரி மாதத்தில் 6பேரும் பெப்ரவரி மாதத்தில் 5பேரும் மார்ச் மாதத்தில் 10பேரும் காசநோயால் பீடிக்கப்பட்டு இருப்பது பரிசோதனைகள்மூலம்கண்டறியப்பட்டது.

குறிப்பாக யாழ். மாநகரப்பகுதியிலேயே காசநோயால் பாதிக்கப்படுவோரின் தொகை அதிகரித்துக் காணப்படுவதாக வும் டாக்டர் யமுனானந்தா மேலும் தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதத்தில் மட்டும் யாழ். மாநகரப் பகுதியில் நான்கு பேர் காச நோயால் பீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காச நோயால் பீடிக்கப்பட்ட அனைவரும் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும் இதன்மூலம் அவர்களை காச நோயின் பிடியில் இருந்து மீட்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (04-224)



நெடுந்தீவு நுண்கலை வீட்டுத்திட்டத்தின் வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் வீடு ஒன்றினை யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் நாடா வெட்டித் திறந்து வைப்பதையும், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் என்.திருலிங்கநாதன், நெடுந்தீவு உதவிப் பொலிஸ் பொறுப்பாளர் ரி.கே.ரி.பண்டார மற்றும் நெடுந்தீவு கடற்படைப் பொறுப்பாளர் ஷேவா விதாரண ஆகியோர் குடியிருப்பாளர்களிடம் வீட்டுத் திறப்பினைக் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்கிறோம்



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சரோஜாதேவி இராசகுமாரன்
அவர்களின் திடீர் மரணத்தினால் துயருற்றிருக்கும் அதே வேளையில், அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சரோஜாதேவி இராசகுமாரன்



(ஆசிரியை, யா/ முத்துத்தம்பி ம.வி.)

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வி.எம்.றோட், பருத்தித்துறையை வதிவிடமாகவும் இல.4, அரசடி ஒழுங்கை, திருநெல்வேலியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரோஜாதேவி இராசகுமாரன் (ஆசிரியை, யா/ முத்துத்தம்பி ம.வி.) 04.04.2009 அன்று அகாலமரணமானார்.

அன்னார் அ.இராசகுமாரன் (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்) அவர்களின் அன்பு மனைவியும் பார்கவியின் (மாணவி, காமல் (முன்பள்ளி) பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2009) திங்கட்கிழமை பி.ப. 2மணியளவில் இல. 04, அரசடி ஒழுங்கை, கேணியடி, திருநெல்வேலியில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ.இராசகுமாரன் (கணவர்),
விரிவுரையாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.
தொ.பே.060 221 4818

செந்தூரம், V.M. றோட், பருத்தித்துறை.
குமான், தொண்டைமானாறு.
இல.04, அரசடி லேன், கேணியடி, திருநெல்வேலி.

### தாமர் இராசேந்திரம்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் பின்னர் வவுனியாவில் வசித்து வந்தவருமான தாமர் இராசேந்திரம் தமது 88 ஆவது வயதில் 26.03.2009 அன்று வவுனியாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திருமதி சுசீலாதேவி சிவராசமூர்த்தி
(மகள்). 024 222 1717

## வலிகாமம் கல்வி வலயத்தில் இணைப்புப்பெற்ற ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம், ஏப்.6

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர்களை இன்று அல்லது நாளை வலயத்தில் சமுகமளித்து ஏப்ரல் மர்தத்துக்குரிய சம்பளப்பட்டியலில் கையொப்பம் இடுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

தமது வரவை உறுதிப்படுத்தும் கடிதத்துடன் சமுகமளிக்குமாறு அவர் அறிவித்துள்ளார்.

(1)

புதுவருட மலிவு விற்பனை!
புதிய, பழைய தமிழ் 3in1/4in1/5in1 DVD 50/-
புதிய, பழைய Audio CD & MP3 40/-
மற்றும் ஏனைய CD, DVDகளுக்கு
10% - 50% விலைக்கழிவு
MUSIC WORLD 141 A, பலாலி வீதி, தபால் பெட்டி சந்தி, திருநெல்வேலி.
தொலைபேசி/பெக்ஸ்: 021 222 6554

### தவறிவிட்டது

அளவெட்டியைச் சேர்ந்த தவராசா பரமேஸ்வரி ஆகிய எனது தே.அ.அட்டை இல. 566543842V, விசேட அடையாள அட்டை ஆகியன கைப்பையுடன் 02.04.2009 அன்று அச்சுவேலி - தொண்டைமானாறு வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்
T.P. 0771754675 அல்லது
கிராம சேவையாளர் J/217
அளவெட்டி கிழக்கு முகவரியில் ஒப்படைக்கவும்.

### சுயதொழில் பயிற்சி

ஒரு மாதத்தினுள் மிகமிகக்குறைந்த கட்டணத்தில் அழகியல் கலை கற்பிக்கப்படும். இம் மாதம் மட்டுமே. இந்தச் சந்தர்ப்பத்தை தவற விடாதீர். Spoken English and Maths வகுப்புக்களும் வீட்டில் வந்தும் கற்றுக் கொடுக்கப்படும்.
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
சாந்தி, 108/6, கச்சேரி நல்லூர் வீதி,
(மூத்த விநாயகர் கோயிலடி) யாழ்ப்பாணம்.

## அந்தியேட்டி அழைப்பு

தோற்றம் 14 ★ 04 ★ 1943



மறைவு 05 ★ 03 ★ 2009

### திருமதி கணபதிப்பிள்ளை இராசேஸ்வரி

கடந்த 05.03.2009 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை இன்று (06.04.2009) திங்கட்கிழமை எமது இல்லத்தில் மு.ப. 11மணியளவில் நடைபெறும். இந்த நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பு: இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கரணவாய் மத்தி,
கரவெட்டி.

சி.கணபதிப்பிள்ளை
(கணவர், தலைவர், MPCS,உடுப்பிட்டி)

## மரண அறிவித்தல்

### திருமதி கிருஷ்ணபிள்ளை மனோரஞ்சிதம் (கிளியக்கா)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மனோரஞ்சிதம் நேற்று (05.04.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நடராசா - செல்லம்மாவின் அன்பு மகளும் ஆனந்தகுமார், விஜயகுமார், கிருஷ்ணகுமார், தர்ஷினி ஆகியோரின் தாயாரும் இந்திராணி, மதிவதனி, வாசுகி ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற கோபாலகிருஷ்ணராஜா மற்றும் மகாலட்சுமி, லோகேஸ்வரி காலஞ்சென்ற சரோஜாதேவி மற்றும் ஜெயலட்சுமி ஆகியோரின் சகோதரியும் இராஜகுமாரி, ஜெயராஜா காலஞ்சென்ற சிவபாலன் மற்றும் கனகலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் சுதாகர், கஜேந்தினி, கஜேந்திரன், சுதர்சன், இராகுலன் ஆகியோரின் பெரியதாயாரும் சஜீவன், கஜந்தன், விதுஷா, விதுஷன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2009) திங்கட்கிழமை சில்லாலையில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப. 10 மணிக்கு திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை மேற்கு,
பண்டத்தரிப்பு.

தகவல்:
ஆனந்தகுமார் (ஐயாஅண்ணை).

## யாழ்.மத்திய கல்லூரி பழையமாணவர் சங்கம் - சுவிஸ்

## வாழ்த்துகின்றோம்



வடக்கின் மாபெரும் போர் என வர்ணிக்கப்படும் 103 ஆவது மாபெரும் துடுப்பெடுத்தாட்டப் போட்டியிலும் ஒருநாள் போட்டியிலும் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெற்றுத்தந்த யாழ்.மத்திய கல்லூரி துடுப்பாட்ட அணியினரையும்

துடுப்பாட்ட அணியினர்



மாவட்ட மட்டத்தில் வெற்றிபெற்ற மேசைப்பந்தாட்ட அணியினரையும்

மேசைப்பந்தாட்ட அணியினர்



இவ்வருடம் முதல் இப் போட்டியில் எமது சங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆட்ட நாயகன் (Man of the match) விருதாக 10,000 ரூபா பணப்பரிசினை முதல் தடவையாகப் பெற்றுக்கொண்ட யாழ். மத்திய கல்லூரி அணித்தலைவர் செல்டன் அவர்களையும்

செல்டன்



மாவட்ட மட்டத்தில் வெற்றிபெற்ற கூடைப்பந்தாட்ட அணியினரையும்

கூடைப்பந்தாட்ட அணியினர்

சுவிஸ் யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் வாழ்த்துவதுடன், இம் மாணவர்களுக்கு காலநேரம் பாராது பயிற்சியும் ஊக்கமுமளித்து வளமூட்டிய அதிபர்கள், பயிற்றுநர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த வீரர்களுக்கு, பயிற்றுநர்கள், மைதான உதவியாளர் ஆகியோருக்கான பணப்பரிசு வழங்கி மதிப்பளிக்கும் நிகழ்வு 07.04.2009 செவ்வாய்க்கிழமை கல்லூரி மண்டபத்தில் மதிப்பிற்குரிய யாழ்.மத்திய கல்லூரி அதிபர் திரு.ஓங்காரமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

**இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.**

வன்னிப் பிரதேச மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் முற்றுமுழுதாகப் பாதிக்கப்பட்ட நிலையிலும், வன்னி மக்களின் துயரங்கள் நிறைந்த சுமைகளின் நினைவுகளுடன் இந்த நிகழ்வு அமைதியான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

நாகராஜா விஜயகுமார்
தலைவர்.
யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்-சுவிற்சர்லாந்து.

மின்னஞ்சல்: jccoba-swiss@hotmail.com
இணையமுகவரி: www.jccoba.ch

Digitized by Noolaham Foundation, noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஒபாமாவின் புதிய நோக்கும், போக்கும்

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பராக் ஒபாமா பதவியேற்ற நாளிலிருந்து ''பயங்கரவாதத்துக்கு எதிரான போர்'' என்ற வாசகம் பின்தள்ளப்பட்டு விட்டதாக அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, பழையன கழிந்து புதியன புகுதல் என்ற வாழ்க்கை நியமத்தைத் தமது அரசாட்சியில் கடைப்பிடிக்க முயல்கிறார் என்பது இதிலிருந்து புலப்படுகிறது.

ஜனாதிபதி புஷ் தமது பதவிக்காலத்தில் புகுத்திய 'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்ற கோஷம், (அவரது வாய்ப்பாட்டில் 'கோட்பாடு') உலகின் பல நாடுகளில் நாசங்களையும் மக்கள் அழிவுகளையும் ஏற்படுத்தியது என்பது பரம இரகசியம் அல்ல.

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி நியூயோர்க்கில் இரட்டைக் கோபுரங்கள் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்தை வைத்து, அதனால் அமெரிக்காவில் உண்டான உயிரிழப்பு மற்றும் வர்த்தகச் சரிவுகளை மனதில் வைத்து ஏற்றிய வஞ்சம் தீர்க்கும் வன்மத்தின் விளைவே ''பயங்கரவாதத்துக்கு எதிரான போர்''.

அந்த வாசகத்தின் பின்னால் நின்று கொண்டு, இல்லை அதனைத் தூக்கிப்பிடித்துக் கொண்டு, பல நாடுகளில் பேரழிவுகளுக்கு வழிசெய்தார் அவர். ஈராக், ஆப்கானிஸ்தான் என்று பட்டியல் நீளும்.

அத்தோடு நிற்கவில்லை. அவரது முன்னுதாரணத்தைப் பின்பற்றி ''பயங்கரவாதத்துக்கு எதிரான போர்'' என்ற சுலோகத்தை பதாகையாக்கி அதற்குப் பின்னால் நின்று கொண்டு ஜனநாயக விரோதச் செயற்பாடுகளில் பல நாடுகளும் அவற்றின் தலைவர்களும் களம் இறங்கினர்.

அந்தந்த நாடுகளில் உள்ள ஆட்சித் தலைவர்கள், தாம் எய்த விரும்பிய சொந்த இலக்குகளை அடைவதற்கு, அவை மக்கள் விரோதமானவையாக இருப்பினும், ஜனநாயகத்துக்கு எதிரானவையாக இருந்தாலும் சரி, புஷ்ஷின் 'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்ற கோஷத்தை எழுப்பி தமக்கு வேண்டியதைச் சாதிப்பதற்கு வாய்ப்பான புதிய சூழலை உருவாக்கினர்.

பயங்கரவாதம் என்பதற்கான அர்த்தம் வெவ்வேறு வடிவங்களில் திரிபுபடுத்தப்பட்டும், அவரவருக்கு தேவைப்படும் விதத்தில் பொருள் கூறப்பட்டும், அதன் வழி நியாயப்படுத்தப்பட்டும் பல நாடுகளில் அவற்றின் மக்களுக்குக் கேடுகளும், அழிவுகளும் உண்டாக்கப்பட்டன.

அந்த நாடுகளில் இலங்கையும் ஒன்று என்பதை விளக்கி, விசாலித்துக் கூற வேண்டியதில்லை.

எப்படியோ, ''பயங்கரவாதத்துக்கு எதிரான போர்'' என்ற வாசகம் ஒபாமாவால் கைவிடப்பட்டிருப்பது அவரது புதிய அரசியல் சிந்தனையையும், நோக்கையும், போக்கையும் பிரதிபலிக்கிறது.

இது விடயத்தில் மட்டுமன்றி, அவர் பின்வரும் அம்சங்களிலும் புரட்சிகரமான, நியாயமான கருத்துக்களை வெளிப்படுத்தி வருவதை அவதானிக்க முடிகிறது.

✱ அமெரிக்கா மாற்றமடைந்து கொண்டு இருக்கிறது

-ஐரோப்பாவில் இருந்து நாங்கள் பலவற்றைக் கற்றுக்கொள்ள முடியும்.

✱ ஐரோப்பா, ஐரோப்பிய ஒன்றியம் மூலம் ஒன்றிணைந்துள்ளது

- அதேபோல் அமெரிக்காவும் ஒன்றிணைந்து உலகத்தை முன்னேற்ற முடியும்.

✱ அணு ஆயுதங்களை குவித்து வைத்துக்கொண்டுள்ள நாடுகள் அவற்றைக் குறைக்க முன்வரவேண்டும்.

- முதலில் அமெரிக்காவும், ரஷ்யாவும் தாம் குவித்துள்ள அணுஆயுதங்களைக் குறைத்து ஏனைய நாடுகளுக்கு வழிகாட்ட வேண்டும்.

- நாம் அவற்றை குவித்து வைத்துக் கொண்டு மற்றவர்களை குறைக்குமாறு எவ்வாறு கேட்க முடியும்?

✱ இந்தியா ஏழைகள் நிறைந்த நாடு. அது வேகமாக வளர வேண்டும். அதனால் தொழிற்சாலைகள் வாயுக்களை வெளியேற்றுவதைக் கட்டுப்படுத்துமாறு கேட்பதில் நியாயமில்லை. நீண்ட காலமாகவே வாயுக்களை மிகுதியாக வெளியேற்றுகின்ற நாடுகள் அதனை முதலில் கட்டுப்படுத்த முன்வர வேண்டும்.

✱ புதிய உலகம் ஒன்றை நோக்கி நாம் முன்னேற வேண்டும். அதற்கு அமெரிக்கா தயாராகி வருகின்றது.

✱ ஈராக்கில் எமது படைகள் நீடித்து இருக்க வேண்டும் என்பதில்லை. அமெரிக்கர்களுக்கு அமெரிக்காவில் நிறையப் பணிகள் இருக்கின்றன.

காலத்துக்கு ஏற்ற மாற்றமும், எல்லா நாடுகளின் கவனமும், நலமும் பேணப்படுதலும் அவசியம் என்ற புதிய - புதுமை நிறைந்த - சிந்தனை ஒபாமாவிடம் மனதூன்றி உள்ளது. இது உலகில் புதியன செய்ய வழிவகுக்கும் என எதிர்பார்க்கலாம்.

# நிலப்பரப்பைப் புலிகள் இழக்க நேர்ந்தாலும் வேறு முறைகளில் அவர்கள் நீடிக்க முடியும்

நேற்று (05.04.2009) 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் அதன் அரசியல் விமர்சகர் எழுதியிருந்த கட்டுரையில் இருந்து சிலபகுதிகள் இங்கு தரப்படுகின்றன.

மெதுவாக ஆனால் உறுதியாக வன்னிப் போர்க்கள மேடையை மூடிமறைப்பதற்கான திரை விழுந்து கொண்டிருக்கிறது. புலிப்போராளிகளை 19 சதுர கிலோ மீற்றருக்குள் முடக்கி விட்டார்கள் இராணுவத்தினர்.

நாடு புதுவருடக் கொண்டாட்டங்களை ஆரம்பிக்கவிருக்கும் வேளையில், தமிழீழ விடுதலைப்புலிகள் இதுவரை காலமும் மிகப்பெருமையுடன் பாதுகாத்து வந்த பகுதியை இழப்பதற்கு முன்னதாக மிகக் குரூரமான போர் ஒன்று அங்கு நடைபெறப்போகின்றது.

சுமார்25 வருடங்களுக்கு மேலாக விடுதலைப்புலிகள் நாட்டின் மூன்றில் ஒருபாகத்தைத் தம்வசம் வைத்திருப்பதாகப் பெருமை பேசி வந்திருக்கிறார்கள்.

கால் நூற்றாண்டுக்கு மேலாக அவ்வப்போது நிலங்களை இழந்தபோதி

## ராணுவ மேல்மட்டங்களில் உள்ள கவலை இது

லும் இந்தப் பெருமை பேசும் நிலைமை தொடர்ந்து இருந்தே வந்துள்ளது.

ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளூரில் எழுந்த அழுத்தங்களைப் புறந்தள்ளிவிட்டு இராணுவ நடவடிக்கையைத் தளர்வின்றி முன்னெடுத்தன் பிரதிபலனை இப்போது அனுபவிக்க விருக்கின்றார்.

புலிகள் மேற்கொண்டும் தம்மிடம் உள்ள பிரதேசங்களை இழக்கும்போது ராஜபக்ஷ தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளக்கூடிய நிலை உருவாகும். அதனைத்தான் இப்போதும் அவர் செய்து கொண்டு இருப்பதாகத் தெரிகின்றது. தமது முன்னவர்களால் செய்ய முடியாமல் போனதைத் தம்மால் செய்ய முடிந்துள்ளது என்று அவர் கூறிக் கொள்ள முடிகின்றது. இது நியாயமானதே. பெருவிரல் வைக்கக்கூடிய இடம்கூட அவர்களுக்கு இல்லாமல் செய்துவிட்டதாக அவர் கூறிக்கொள்ள முடியும்.

ஆனால் இராணுவ அதிகாரிகளின் கவலை என்னவென்றால் புலிகளின் அச்சுறுத்தல் தொடர்ந்து இருக்கவே செய்யும் என்பது போக, அவர்கள் புதிய மாதிரிகளில் தோன்றுவதற்கு சாத்தியம் இருக்கிறது என்பதாகும்.

ஆனால் இது வேறு பிரச்சினை, எதுவானாலும் இந்த வெற்றிக்கு ராஜபக்ஷ முழு அளவில் சொந்தம் கொண்டாட முடியாது. அவர்களுக்கு முந்திய தலைவர்களும் தங்களுக்கே உரிய முறைகளில் தமது ஆட்சிக் காலத்தில் புலிகளை முறியடிக்க முனைந்து வந்திருக்கிறார்கள்.

### வெளியேறும் கெரிலாக்கள்

இப்பொழுது உருவாகியுள்ள புதிய நிலைமைகளின் படி போர்முனையிலும் அதற்கு வெளியிலும் வேகமான புதிய மாற்றங்கள்தோன்ற ஆரம்பித்துள்ளன. இவைகளில் குறைந்தது இரண்டு அம்சங்கள் குறிப்பிடக்கூடியவை. ஒன்று என்ன வென்றால் புலிகளின் சில மத்தியதரத் தலைவர்கள் ஏன் உயர்மட்டத் தலைவர்களும்கூட முல்லைத்தீவுப் பகுதியில் இருந்து படகுகள் மூலமாக தென்னிந்தியாவுக்கு கடல் மார்க்கமாகச் சென்றிருப்பது. ஆனால் அப்படியான நடவடிக்கை எதுவும் இடம்பெறவில்லை என்று இலங்கைக் கடற்படை அடிக்கடி கூறி வந்துள்ளது. கடற்பரப்பில் தாங்கள் மேற் கொண்டுள்ள கண்காணிப்பு அவ்வளவு தீவிரமாக செயற்படுத்தப்படுவதாக அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் சென்னையில் இருந்து கடந்தவாரம் கிடைத்த தகவல்கள் வேறு கதைகளைக் கூறுவதாக இருந்தன. ஒரு சம்பவத்தில் சில சிவிலியன்கள் - அவர்களில் சிலர் மோதலின்போது காயமடைந்தவர்கள்- தமிழ்நாடு கரையோரத்திற்குச் சென்று சேர்ந்துள்ளார்கள். அது மட்டு மல்ல வெற்றிகரமாக அங்குள்ள அகதிகளுக்கான முகாம்களிலும் சேர்ந்து கொண்டுள்ளார்கள்.

தமிழ் நாட்டில் கண்டு பிடிக்கப்பட்டு விடுவார்கள் என்ற பயத்தில் கெரிலாக்கள் அயல் மாநிலமான கேரளாவுக்குள் நகர்ந்து விட்டார்கள் என்றும் கூறப்படுகிறது. கேரளாவில் கடும் சோதனைகளை அம்மாநிலப் பொலிசார் மேற்கொண்ட போதிலும் ஊடுருவல்காரர் எவரும் கண்டு பிடிக்கப்படவில்லை. கரையோரங்களில் ஒதுங்கிய வள்ளங்களும் காணப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டது. இருந்தபோதிலும் கொழும்பிலுள்ள பாதுகாப்பு அதிகாரிகளுக்குக் கிடைத்துள்ள செய்திகளில் கேரளாவில் உள்ள சில மறைவிடங்களுக்கு சில கெரிலாக்கள் சென்றடைந்திருப்பதாக அறிய வந்துள்ளது.

இந்தத் தகவல்கள் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், அவரது புதல்வர் சாள்ஸ் அன்ரனி ஆகியவர்கள் மீது கவனத்தைத் திருப்பியுள்ளது. புலிகளின் தலைவர் பிரபாகரன் இப்பொழுதும் சுருங்கிக் கொண்டிருக்கும் போர்க்களப் பகுதிகளிலேயே இருந்து வருவதாகக் கூறப்படுகின்றது. அவரது மகன் சாள்ஸ் அன்ரனி இராணுவத்தின் ஆட்லறித் தாக்குதலில் சிறுகாயங்களுக்கு உள்ளானதாகக் கூறப்படுகின்றது. சாள்ஸ் அன்ரனி ஒரு தடவை அவர் தந்தையின் செய்தி ஒன்றுடன் ஐரோப்பிய நிலைகளுக்குச் சென்றதாகக் கூறப்பட்டது. பின்னர் அவர் தந்தையுடன் சேர்ந்து கொள்வதற்கு திரும்பி வந்திருந்தார். ஆனால் ஏதோ காரணத்துக்காக ஐரோப்பாவிலுள்ள புலிகளின் மையங்கள் அன்ரனியின் பயணம் பற்றிய செய்தியை மறுத்துவிட்டன.

ராஜதந்திர வட்டாரங்களைப் பொறுத்தவரை, பத்மநாதன் நோர்வே தரப்பினரை அக்கறை கொள்ளச் செய்வதற்குத் தவறிவிட்டார் என்று கருதுகிறார்கள். பொதுமக்கள் அனுபவிக்கும் துன்பங்களுக்கான குற்றத்தை அரசு மீது மட்டும் ஏன் போட வேண்டும். புலிகளைத் தொடர்ந்தும் ஓர் அதிகார சக்தியாக ஏன் கருத வேண்டும் என்பதற்கும் சரியான நியாயங்களை முன்வைக்க புலிகள் தவறிவிட்டார்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள். பத்மநாதனுடன் நோர்வேத் தூதுவரின் சந்திப்பு முடிவில்லாமல் முற்றுப்பெற்றது. அதன்பிறகு உருவான எதிர்ப்புகள் நோர்வேஜியர்கள் பத்மநாதனை கைவிட்டு நடேசனுடன் பேசும்படி சொல்ஹெயிமைக் கேட்டுக்கொள்ள உதவியது. சர்வதேச சமூகத்தினர் புலிகளுக்கு சொல்ல விரும்பியதை சொல்ஹெய்ம் மூலம் புலிகளுக்கு சொல்ல வைத்தார்கள்.

### அரசின் இரட்டை வேடம்

இந்த ராஜதந்திர செயற்பாடுகள் நடந்து கொண்டிருந்த அதே வேளையில் அரசாங்கமும் தனது இரட்டை விளையாட்டைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஒரு நாடு கூறுவதை தலையை ஆட்டி ஏற்றுக்கொண்டு விட்டு பின்னர் வெளியுறவு அமைச்சு மூலம் அதற்கு மாறான பரப்புரையை நட்பு ஊடகம் மூலம் வெளியிடுவது ஒரு பழக்கமாகி வருகின்றது. பிரிட்டன் டெஸ்ட் பிரௌவுணை சிறப்புத் தூதுவராக நியமிக்க விரும்பிய விடயத்திலும் இது நடந் தேறியுள்ளது. இது கடந்த வியாழக்கிழமை கொமன்ஸ்சபையில் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் டேவிட் மிலிபான்ட வெளி யிட்ட அறிக்கையின் போது தெரியவந்துள்ளது.

பிரிட்டன் தனது சிறப்புத் தூதுவரை நியமிப்பதற்கு முன்னராக ஜானாதிபதி ராஜபக்ஷவுடன் பேசியிருப்பதாக இன்னமும் வலியுறுத்தி வருகின்றது. பின்னர் தூதுவர் ஹெட்ரம் ஜனாதிபதி யைச் சந்தித்து தமது நிலைப்பாடு குறித்து விளக்கியிருக்கிறார் என்று அரசு தரப்பினர் கூறுகிறார்கள்.

## போர் முடிந்தால் நாட்டின் அபிவிருத்திக்கு சர்வதேச நாணய நிதியம் உதவுமா?

தற்பொழுது அவர் போரில் ஈடுபட்டுள்ள போராளிகளுக்கு தீவிரமாக உதவுவதில் ஈடுபட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. இந்த நிலைமைகள் பாதுகாப்புத் தரப்பினர்களுக்கு கவலையைக் கொடுத்திருக்கும் அதே நேரம் புலிகளுக்கு புதிய கனரக இராணுவத் தளபாடங்கள் கப்பல்களில் வந்து இறங்கியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

கடந்தவாரம் குறிப்பிட்டதுபோல் காயமடைந்த போர்ப்படைகளை ஏற்றி இறக்குவதில் ஈடுபட்டிருந்த ஹெலி கொப்டர்கள் இரண்டை வீழ்த்துவதற்கு அவர்கள் ஏவுகணைகளைப் பயன்படுத்தி இருந்தார்கள். இவை புதிதாக கொள்முதலான ஆயுதங்கள் என்று தெரிய வந்துள்ளது. இந்தக் கவ லைகளை அதிகப்படுத்துவதாக வவு னியாவில் இடம் பெற்ற கண்டு பிடிப்புகள் இருந்துள் ளன. இவைகளில் மிகப் புதிய எறிகுண்டுகள் காணப்பட்டுள்ளன. இவை மிக அண்மையில் இறக்கப்பட்ட சரக்குகளில் இருந்து வந்திருப்பதாகக் கருதப்படுகிறது. இலங்கையில் போர்நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவர குமரன் பத்மநாதன் வெளிநாடுகளில் மேற் கொண்ட முயற்சிகளும்,பேச்சுக்களும் பயன் அளிக்கவில்லை என்று தெரிய வந் துள்ளது.

### நோர்வேத் தூதுவர் கூறுவது....

மேலும் மேற்குலகில் விடுதலைப் புலிகளுக்கு இருந்து வந்த சிறிதளவு அனுதாபமும் இப்போது இல்லாமல் போய்விட்டதாக கொழும்பிலுள்ள நோர்வேத் தூதுவர் கூறியுள்ளார். பொதுமக்களை பணயமாக வைத்திருப்பது இதற்குக் காரணம் என்றும் அவர்களுக்கு உள்ள ஒரே வழி சரணடைவதும் அரசுடன் பேச்சுக்குச் செல்வதுமே என்று அவர் தெரிவித்துள்ளார். சர்வகட்சிப் பிரதிநிதிகள் தீர்மானத்தை வெளிப்படுத்த வேண்டும் என்றும் தீர்வு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நோர்வே இன்னமும் அமைதி அனு சரணையாளராக இருந்து வருகிறது. போர் நடைபெறும் பகுதிகளில் சிக்கி யுள்ள மக்களின் சார்பில் அது தலை யிட வேண்டி இருந்துள்ளது. அதேசமயம் பொதுமக்களை வெளியே அனுமதிக்குமாறு புலிகளை வலியுறுத்தவும் செய் துள்ளது. ஆனால் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்று அவர்கள் தொடர்ந்து மறுத்து வந்துள்ளனர்.

கொழும்பிலுள்ள ராஜதந்திரிகளை பொறுத்தவரை இன்னொரு காரணம் என்னவென்றால் சிவிலியன்களை அப் புறப்படுத்த அமெரிக்கத் தலைமையில் மனிதாபிமான கூட்டுச் செயல் அணியொன்றை உருவாக்கும் உதவி வழங்கும் இணைத்தலைமைகளின் முயற்சியாக இருக்கலாம். புலிகளின் சம்மதத்தைப் பெறும் கடமை நோர்வேயின் கையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஹெட்ரம், ஜனாதிபதியைச் சந்தித்த தின் காரணமாக நிலைமை சீர் செய்யப்பட்டுவிட்டதாகத் தெரிகின்றது.

எஞ்சியிருக்கும் பத்தொன்பது சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பு கைப்பற்றப்பட்டவுடன் போருக்குப் பின்னரான அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக அரசு இப்போது கவனத்தைச் செலுத்தத் தொடங்கியுள்ளது. இந்த வகையில் சர்வதேச நாணய நிதியத்திடமும் முன்வைத்துள்ள 1.9 பில்லியன் அமெரிக்க டொலருக்கான கோரிக்கை நிறைவேற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் பணத்தில் ஒரு பகுதி போரில் சீர்குலைந்து போயுள்ள வடக்கு-கிழக்கை புனர்நிர்மாணம் செய்யப் பயன்படுத்தப்படும் என்று தெரிகிறது. சர்வதேச நாணயநிதியத்திலிருந்து வருகை தந்த நிபுணர்கள் தமது ஆய்வுகளை முடித்துக் கொண்டு திரும்பியுள்ளார்கள். ஆனால் இந்நிதிக் கோரிக்கை நிறைவேறுமா என்பதே இப்போதுள்ள கேள்வி. (ப)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 25 | 07.04.2009 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | திரயோதசி |
| | மு.இ. 10.14வரை |
| நட்சத்திரம்: | பூரம் |
| | பி.ப. 04.019 வரை |
| சுபநேரம்: | 01.37 - 12.07 |
| ராகுகாலம்: | 03.07 - 04.37 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுகாதாரப் பராமரிப்பு நிலையத்தை பழைய இடத்தில் செயற்படக் கோரிக்கை

கோப்பாய், ஏப்.6

ஊரெழு ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு சிகிச்சை நிலையத்தை உரிய இடத்தில் மீண்டும் செயற்பட உதவுமாறு வண்ணம் ஊரெழு வாழ் மக்கள் சார்பில் அப்பிதேச கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் ஊரெழு பகுதியில் இயங்கும் மனித உரிமைகள் நிலையம் ஆகியன கோரிக்கை விடுத்துள்ளன.

கடந்த வருட இறுதிப் பகுதியில் ஏற்பட்ட 'நிஷா' புயல், வெள்ள அனர்த்தம் ஆகியவற்றால் ஊரெழு ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு நிலையம் பாரிய பாதிப்பிற்கு உள்ளாகியது. இதன் காரணமாக கடந்த நவம்பர் மாதம் தொடக்கம் இன்றுவரை இந்தநிலையம் இயங்கவில்லை.

இதனால் இப்பிரதேசத்தைச் சேர்ந்த கர்ப்பவதிகள், குழந்தைகள் சகிதம் நீண்ட தூரம் பயணம் செய்து உரும்பிராய் சிகிச்சை நிலையத்திற்குச் சென்று சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், சிகிச்சை உரிய நேரத்தில் கிடைத்த போதிலும் பாதை அடிக்கடி மூடப்படுவதால் நீண்ட நேரம் காத்திருந்து வீடு திரும்ப நேரிடுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

(04-72)

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

கோப்பாய், ஏப்.6

ஊரெழு கிழக்குப் பகுதியில் இயங்கும் மனித உரிமைகள் நிலையம், வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் கிராமங்கள் தோறும் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை மேற்கொள்ளவுள்ளது. இதற்குரிய வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், இதன் மூலம் இப்பிரதேச மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகளை இலகுவில் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(04-72)


# CAD & BS

Computer Aided Drafting and Building Studies

Full of Job Opportunities Everywhere

A Complete a Prestigious Course in Jaffna



Modules
1.Building Technology
2.Construction Materials
3.Building Services
4.Building Drawings
5.Quantity Surveying
6.Basic Theory of Structures
7.Computer Aided Drafting

விசேடமாக வடிவமைக்கப்பட்ட இக்கற ந நெறியானது கட்டடத் தொழில்நுட்பவியலாளர்கள், கட்டடத் தொழில்நுட்ப மாணவர்களுக்காக நவீன தொழில்நுட்ப யுக்திகளை உங்கள் துறையில் பிரயோகிக்கதக்க வகையில் வடிவமைக்கப்பட்ட விசேட கற்கைநெறியாகும். இக்கற்கை நெறி இத்துறையில் நீங்கள் உயர்கல்வியை தொடரவோ அல்லது வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவோ ஓர் சிறந்த அத்திவாரமாகும்.

வெகு வேகமாக வளர்ந்து வரும் கட்டட நிர்மாணத்துறையில் CAD வடிவமைப்பாளர்கள், தலமேற்பார்வையாளர்கள் போன்ற வேலைவாய்ப்புகளுக்கு அடிப்படையான நவீனதொழில் சார் நுட்ப அறிவினை உள்ளடக்கியுள்ள கற்கைநெறியாக அமைந்துள்ளது

Duration : 6 Months

Commences : 26th April 2009

Registration now on...

For information contact | Bahee / Anu 077 9853727

IIS CITY CAMPUS

#200,Sivan Pannai Road,Jaffna.
Tel:021 222 8060 Fax:021 222 6933
Web: www.iiscitycampus.com



# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1077 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

கன்னி 01 20 36 49

03-04-2009

செல்லுபடியாகும் தொடர் இல. 500024001 - 500044703

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 221,272 | 20/- | 4,425,440/- |
| 2 இலக்கங்கள் | 20,231 | 40/- | 809,240/- |
| 1 இல. + லக்கினம் | 19,859 | 60/- | 1,191,540/- |
| 2 இல. + லக்கினம் | 1,890 | 200/- | 378,000/- |
| 3 இலக்கங்கள் | 546 | 1000/- | 546,000/- |
| 3 இல. + லக்கினம் | 53 | 10,000/- | 530,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| மொத்தம் | | | 8,480,220/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 263,859 | | 8,980,220/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,986,950/-

தொடர் இலக்கம் 400020873 க்கு மேற்பட்ட நல்ல நிற டிக்கட்டுக்கள் 2009 ஏப்ரல் 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| பதுளை | 500030459-7-38 |
| மட்டக்களப்பு | 500044036-7-32 |
| அநுராதபுரம் | 500040016-9-12 |
| புத்தளம் | 500038352-9-21 |
| குருநாகல் | 500042601-7-36 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சேன் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03



# கலாலயா

பயிற்சியகம்

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

## விடுமுறைக் கால 10 நாள் வகுப்புக்கள்

- கூந்தல் அலங்காரம் : 50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் பண்ணுதல். முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், V- Cut, U- Cut, Step வடிவங்களில் முடி வெட்டுதல்.
- Facials மற்றும் மணப்பெண்கள் அலங்காரம், 6 முறைகளில் சேலை அணிதல், கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல் (Pedicure, Manicure.)
- பப்றிக் வர்ணம் தீட்டுதல் : கைக்குட்டை, தலையணை உறை, கண்ணாடி மற்றும் சேலையில் (Saree Painting) வர்ணம் தீட்டுதல்.

மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

- தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ், சுரிதார், Skirts தைத்தல்

தங்கள் வசதிகளுக்கேற்ப கிழமை நாள் அல்லது சனி, ஞாயிறு பயிலமர்வுகளில் கலந்து கொள்ளலாம்.

மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது

ஆரம்பம் - 09-04-2009 காலை 9.00 மணி

மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

பதிவாளர்.


# மரண அறிவித்தல்

## திருமதி கருணாதேவி கதிர்காமநாதன்



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஒஷோவா, கனடாவில் வசித்து வந்தவருமான திருமதி கருணாதேவி கதிர்காமநாதன் 01.04.2009 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தணிகாசலம் கதிர்காமநாதனின் (ஓய்வுபெற்ற அதிபர்) ஆருயிர் மனைவியும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு சுப்பையா- ஈஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான துரையப்பா தணிகாசலம்- பத்மாவதி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான சுப்பையா இராசநாயகம், திருமதி கமலாதேவி கதிர்காமநாதன் மற்றும் திருமதி கண்மணி இரத்தினசபாபதி, குகதாசன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஜோதிவேல் (றமணா), கீதா, சுதர்சன், வினிதா, சுஜாதா ஆகியோரின் பாசமிகு தாயும் வகுலமாலா, நந்தகுமார், கல்பனா, திருக்குமார், வசந்தன் ஆகியோரின் அன்பு மாமியும் நவீன், பிரணவி, சரணவி, ஆரபி, அபிரா, லீஷா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் பத்மநாதன், காலஞ்சென்ற சண்முகநாதன், காலஞ்சென்ற இரகுநாதன், காலஞ்சென்ற யோகதேவி, உமாதேவி, பஞ்சநாதன், Dr.ஆறுமுகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் TORONTO, CANADAஇல் 04.04.2009 சனிக்கிழமையும் 05.04.2009 ஞாயிற்றுக்கிழமையும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இன்று (06.04.2009) திங்கட்கிழமை இறுதிக்கிரிகைள் நடைபெற்று, பூதவுடல் கனடாவில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

| | |
|---|---|
| K. ஜோதிவேல் (றமணா) France, | T.P.: 331786 94281 |
| N. கீதா நந்தகுமார்- U.S.A. | 410 628 7827 |
| K.சுதர்சன் - Canada | 905 723 1543 |
| T.வினிதா - U.K. | 44 208 647 7059 |
| V.சுஜாதா - Canada | 905 201 8466 |
| M.S.குகதாசன் - Canada | 416 431 2437. |

(84175)



# 21 ஆவது பிறந்த நாளும் 182 ஆவது நாள் நினைவலைகளும்

## நந்தாஜினி சிவராமலிங்கம்

தோற்றம்: 06.04.1988 மறைவு: 10.09.2008

[illegible]

கைதடி வடக்கு, கைதடி. (84146)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனோ நிலை பிறழ்வும் மன நோயும்

கேள்வி: கடந்த மாதம் நான் அவுஸ்திரேலியா சென்றிருந்தேன். எனது நண்பர்கள் என்னை கடற்கரை உட்பட பல இடங்களுக்கு அழைத்துச் சென்றார்கள். இம்முறை அவுஸ்திரேலியாவில் கோடைகால வெப்பம் அதிகம். இதனால் எனது தோல் எரிந்து கருமையாகியுள்ளது. சில இடங்களில் தோல் வெளிறியும் உள்ளது. இப்போது இலங்கைக்குத் திரும்பி வந்து விட்டேன். பரிகாரம் கூறவும்.

பதில்: உங்களுக்கு ஏற்பட்டுள்ளது Sun Burn என்கின்ற சூரிய ஒளியில் உள்ள புற ஊதாக் கதிர்களால் (Ultraviolet Rays) ஏற்பட்ட கோளாறு. இந்தக் கதிர்கள், சூரிய ஒளியில் நீங்கள் இருக்கும்போது தோல் திசுக்களை அழற்சியுறச் செய்கின்றன. இது உயிருக்கு ஆபத்தில்லாவிடினும், எரிவு வேதனை, தோல் கருமையடைதல், பின்னர் தோல் உரிதல் என்பனவற்றைத் தருகிறது. நீங்கள் இலங்கையைச் சேர்ந்தவர் என்பதால் - உங்கள் தோலில் உள்ள Melanoctyes - என்கிற நிறம் தரும் கலங்கள் அவ்வளவாக பெரிய பிரச்சினையை சாதாரண சூரிய ஒளிபடுவதனால் ஏற்படுத்தமாட்டாது. ஆனால் நீங்கள் விடுமுறைக்காக சென்றபடியால் குறுகிய காலத்தில் அதிகளவான சூரிய ஒளிக்கு



முகம்கொடுத்திருக்கின்றீர்கள். மேலும் அவுஸ்திரேலியாவில் - சூரிய ஒளியில் இலங்கையை விட அதிகளவு புற ஊதாக் கதிர்கள் இருக்கின்றன. இதனால் - அவுஸ்திரேலிய வெள்ளைத் தோல் வாசிகளுக்கு - தோலில் மெலனின் கலங்கள் குறைந்தும் இருப்பதால் தோல் புற்று நோய் அவுஸ்திரேலியவாழ் வெள்ளைத் தோல் மக்களிடம் அதிகமாகக் காணப்படுகின்றது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் குறைந்தது 30 நிமிட நேரம் வெயில்பட்டாலே தோல் எரிந்து விடும். அதே வேளையில் சூரிய ஒளியால்தான் எமது உடலுக்குத் தேவையான விட்டமின் D கிடைக்கின்றது என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. உங்கள் பிரச்சினைக்கு தற்போது Calamine Lotion போன்ற பூச்சு மருந்துகள் குணம் தரும். எதிர்காலத்தில் இப்படி 'சூரிய எரிவு' (Sun Burn) பிரச்சினைகள் ஏற்படாதிருக்க - விடுமுறைக்குப் போகும் போது அகலமான Wide Brimmed தொப்பிகள், நீண்ட உடுப்புகள், நீண்ட காற்சட்டைகளை அணியுங்கள். சூரிய கதிர்கள் தாக்காதவாறு Sun Blocking Creams மை உதடு - முகத்திற்கு பூசிக்கொள்ளுங் கள். அதிகளவு சூரியக் கதிர் தாக்கம் உடலில் பொக்களங்கள், தலை வலி, மாறாட்டக் குணம், வாந்தி, மயக்கம் என்ப வற்றை தரும் என்பதையும் - அந்த நேரங் களில் சரியான மருத்துவ சிகிச்சை அளிக் கப்படாவிடில் - உயிராபத்து நேரலாம் என்பதையும் தெரிந்து கொள்ளவும்.

***

கேள்வி: எனக்கு வயது 30. கடந்த சில காலங்களாக எனக்கு நோய் இருக்கிறது. மனதில் சூழலில் இருக்கின்ற விஷக் கிருமிகள் எனக்குத் தொற்றி விடுமோ என்கின்ற பயம்; இதனால் வெளியே எங்கேயாவது போய் வந்தால் பத்துத்தடவைகளாவது கைகால்களை நன்றாக உரசிக் கழுவுவேன். இரண்டு மூன்று தடவைகள் குளிப்பேன். ஆனால் எனக்கு நன்றாகப் புரிகின்றது; நான் இப்படி கழுவுவது குளிப்பதெல்லாம் பிரயோசனம் இல்லாதது என்று. ஆனால் எனது மனம் இவற்றைச் செய்யத் தூண்டுகின்றது. எப்படியாவது இவற்றைச் செய்தால்தான் மனதில் பயம் குறைகின்றது. எனது உறவினர்கள் எனது செய்கைகளைப் பார்த்துச் சிரிப்பார்கள், கோபப்படுவார்கள். ஆனாலும் நான் எனது செய்கைகளை மாற்ற முடியாமல் கஷ்டப்படுகின்றேன். பிறர் கண்களுக்கு படாமல் ஒளிந்தாவது கை கால்களை கழுவினால் தான் மனம் நிம்மதியாகிறது. எனக்கு மிகவும் நெருங்கிய நண்பர்கள் ஒரு மனோவியல் நிபுணரின் ஆலோசனையைப்பெறச் சொல்கின்றார்கள். ஆனால் எனக்கு இது மனநோயாகத் தெரியவில்லை. உங்கள் அபிப்பிராயம் என்ன?




பதில்: உங்களுக்கு ஏற்பட்டிருப்பது Obsessive - Compulsive Disorder என்கின்ற ஒரு மனோநிலை பிறழ்வு. இதனை முழுக்க முழுக்க மனோநோய்கள் ரகத்தில் சேர்க்க முடியாது. சாதாரணமாக வெளியே எங்கேயும் போய் வந்தால் - சுகாதாரப் பழக்கமாக கைகால் கழுவுவது - வழக்கமாக - மனிதர்கள் செய்யும் காரியம். ஆனால் தொற்றுநோய்க் கிருமிகள் தொற்றிக்கொண்டு வந்திருக்குமே என்ற பயம் மனதில் திரும்பத்திரும்ப வந்து அதற்காக அடிக்கடி கை கால்கள் கழுவ காரணம் இல்லை. பயத்தினால் மனஉந்துதல் ஏற்படுவது அசாதாரண நிலை. இந்த மனோநிலையை Obsession என்று மனோவியலில் அழைப்பார்கள். இந்த மனோநிலைக்குத் தீர்வாக ஒரு செயலைத் திரும்பத்திரும்ப - செய்வது- அதாவது கை காலை ஒருதரம் அல்ல பலதரம் - செய்வது Compulsion என்ற மனோநிலை. இந்த இரண்டு மனோநிலைகளையும் சேர்த்துத்தான் உங்கள் கோளாறை Obsessive - Compulsive Disorder என்று அழைக்கின் றார்கள். இது ஒரு மனோவியாதி அல்ல. மனநிலைப் பிறழ்வு மாத்திரம் தான். இந்தக் கோளாறு உள்ளவருக்கு அவரது பயம், மற்றும் செய்கைகள் தேவையற்ற தொன்றாக நன்றாகப் புரியும். மனோவியாதியின் போது நோயாளியின் மனோநிலை இப்படியல்ல. மனோவியாதிக்காரர்கள்



- இந்த உலகில் தாம் இருப்பதாக உணர்வதில்லை. அவர்களது வேறொரு உலகில் வாழ்வது போல் - அவர்கள் செய்கைகள் அவர்களுக்குப் புரிவதில்லை. இதனால்தான் உங்கள் கோளாறு மனோவியாதியல்ல - மனப் பிறழ்வு - குணமாக்கக்கூடியது என்று தெளிவாகச் சொல்கிறேன். உங்கள் கோளாறுக்கு Exposure Therapy என்கின்ற சிகிச்சை முறை அறிவுறுத்தப்படுகின்றது. உங்களது பயத்திற்குக் காரணமான சூழ் நிலைக்கு உங்களை அடிக்கடி ஆளாக்கி உங்கள் பயம் அடிப்படை இல்லாதது என்பதை உங்களுக்குப் புரிய வைப்பதே இந்தச் சிகிச்சை முறையின் நோக்கம் - எனவே நீங்கள் தகுதி பெற்ற மனோ வியல் நிபுணரின் ஆலோசனை பெற்று, முற்றாக் குணமடைய வழியுண்டு.

***

**இலவச மருத்துவ ஆலோசனை பெறுங்கள்**

நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.
நீண்ட கால அநுபவம் உள்ள பிரபல டாக்டரும் விஞ்ஞானத்துறை எழுத்தாளருமான
**டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம்**
பதில் தருகிறார்.

**இலவச மருத்துவ ஆலோசனை**
**உதயன்**
381, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# ராசி பலன்

06-04-2009 முதல்
12-04-2009 வரை
பொ.சந்திரலிங்கம்

## மேஷம்



அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

## இடபம்



கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பாற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலேங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

## மிதுனம்



மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பாற்றக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. மன அமைதி இருக்கும்.

## கடகம்



புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## சிம்மம்



மகம், பூரம், உத்தரம் 1

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு காலதாமதமாகலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. மன அமைதி இருக்காது.

## கன்னி



உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய்நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்கும்.

## துலாம்



சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## விருச்சிகம்



விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## தனுசு



மூலம், பூராடம், உத்தராடம் 1.

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர். உதவியை எதிர்பார்ப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்கும்.

## மகரம்



உத்தராடம் 2, 3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர்; பதிலுக்கு உதவியை எதிர் பார்ப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம்காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. நண்பர்களால் தொல்லையுண்டு. மன அமைதி இருக்காது.

## கும்பம்



அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. மன அமைதி இருக்காது.

## மீனம்



பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவி செய்வர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் வளத்தைக் கொண்டு உலகத் தரத்திற்கு நிகரான புத்தாக்கங்களைப் படைத்த சாதனை மாணவன்



இணுவில் மத்திய கல்லூரியில் ஜி.சி.ஈ. உ/த கலைப்பிரிவில் கற்றுக் கொண்டிருப்பவர் குலசிங்கம் நிறோஜன். இதுவரை பல்வேறு தொழினுட்பத் துறைகளையும் சேர்ந்த 21 புத்தாக்கங்களை ஆக்கியுள்ள சாதனையாளர். அவரது புத்தாக்கங்களுள் முக்கியமானவை பற்றிய விவரங்களையும், அவருடன் கண்ட செவ்வியையும் உதயன் வாசகர்களுக்காக இங்கே தருகிறோம்.

கேள்வி: புத்தாக்கத்துறையில் உங்களின் கண்டுபிடிப்புகள் எவை என்பதையும் அவற்றின் பயன்பாடுகள் குறித்தும் கூறமுடியுமா?

பதில்:

1) நடக்கும்போது தொலை பேசிக்கு மின்னேற்ற (Charge) உதவும் சப்பாத்து.

தொலைபேசிக்கு மின்னேற்ற பொதுவாக 4.5 V மின்சாரம் தேவை. இச்சப்பாத்தை அணிந்து கொண்டு 1km நடப்பது 2 தொலைபேசிகளுக்கு மின்னேற்ற உதவும். சப்பாத்தினுள் அமைக்கப்பட்ட ஸ்பிரிங்குடன் இணைந்த கருவிகள் மூலம் மின்சாரம் கிடைக்கும்.

2) 3 சாதாரண மின்கலங்களைக் கொண்டு 45W மின்குமிழை (Bulb) எரியச் செய்யும் மின் சேமிப்புமாணி.

3) சிறிய டிஸ் அன்ரனாவில் (Kuband) இலகுவாகத் தொலைக்காட்சி அலைவரிசைகளை சரிபண்ண உதவும் கருவி. வழமையான கருவியில் Signal பார்க்க ஒருவரும் சரிபண்ண ஒருவரும் தேவை. இதில் தனியொருவரே போதும். இதன்போது றிசீவர் பொருத்தி தொலைக்காட்சியில் அலை எண் பார்க்கத் தேவையில்லை.

4) சூரிய ஒளியை நோக்கிச் சோலர் கருவி தானாகவே திரும்ப உதவும் கருவி.


சூரியன் காலையில் கிழக்கிலிருந்து படிப்படியாக மேற்கு நோக்கி நகரும். அது செல்லும் திசையில் இக்கருவி மூலம் சோலர் திருப்பப்படுவதால் அதிக மின்சக்தி சேமிக்கப்படுகிறது. இதற்கு இலங்கை புத்தாக்க ஆணைக்குழு Automatic Rotating Solar Panel என்னும் பெயரில் காப்புரிமை கொடுத்துள்ளது.

5) றெஜிபோம் வெட்ட உதவும் கருவி.

U வடிவில் அமைந்த மரத்துண்டின் வாய்ப்பகுதி மெல்லிய கம்பியால் இணைக்கப்பட்டுள்ளது. இக்கம்பிக்கு மின்சாரத்தை வழங்க அது சூடேறுகிறது. இந்தக் குறைந்த வெப்பமுடைய கம்பி றெஜிபோமை விரும்பிய வடிவில் வெட்ட உதவுகிறது.

6) துவிச்சக்கர வண்டியின் அமைப்பிற் செய்யப்பட்டுக் குழாய்க் கிணற்றிலிருந்து நீர் இறைக்க உதவும் இயந்திரம். சீற்றிலிருந்து கொண்டே சைக்கிளை உழக்க மின் மோட்டரிலிருந்து வருவதுபோல நீர் தொடர்ச்சியாக வரும்.

7) பற்சக்கரங்கள் உள்ளே பொருத்தப்பட்ட இலகுவாகத் தேங்காய் துருவ உதவும் இயந் திரம்.



8) ஒளிச்சக்தியை மின் சக்தியாக மாற்றும் அடுப்பு, 9) சலோரேப் வெட்ட உதவும் கருவி, 10) இலகுவான அளவைக் கருவி.

அடுப்பு எரியும் ஒளியை சோலர் கருவி பெற்று மின்சக்தியாக மாற்றி மின்கலத்தில் சேமித்து வைக்கும். இவை தவிர மின்னொளியைச் சேமித்து வைக்கும் கொம்பாஸ் நீர்த்தொட்டியில் நீர் நிறைந்தவுடன் தானாகவே மோட்டரை நிறுத்தி நீர்மட்டம் குறைய மோட்டரை இயங்கச் செய்யும் கருவி என 21 இற்கு மேற்பட்ட புத்தாக்கங்களை நான் கண்டு பிடித்துள்ளேன்.

கேள்வி: நீங்கள் புத்தாக்கத்துறையில் எப்போதிருந்து ஈடுபடுகிறீர்கள்? இதற்கான ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டது?

பதில்: நான் தரம் 9 இல் படித்துக் கொண்டிருக்கும்போது பாடசாலையில் கண்காட்சி ஒன்று நடைபெற்றது. அதற்கு எனது பொருள்களையும் காட்சிப்படுத்த வேண்டு மென்ற ஆசையினால் ரோபோ, வோஷிங்மெசின், கிறைண்டர் என்பவற்றைப் பார்த்து அவற்றில் சில மாற்றங்கள் செய்து புதிய முறையில் செய்து கொடுத்தேன். இதனை எமது அதிபர் அ.சதானந்தன், உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆகியோர் பாராட்டினர். இது எனக்கு ஊக்குவிப்பாக அமைந்தது. எனது பெற்றோர் வறிய நிலையில் இருந்தாலும் எனக்குத் தேவையான பொருள்களை வாங்கித் தந்து ஊக்குவித்தனர். நண்பர்களும் எனக்கு உதவினார்கள். கருணாகரன், சிவா என்னும் இரு நண்பர்கள் மின்சாரத்தை எவ்வாறு கையாள்வது தொடர்பாக விவரங்களைச் சொல்லித் தந்தனர். மேலும் என்னை ஊக்கப்படுத்தி போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறப்பெரிதும் உதவியவர்களில் எனது பாடசாலை ஆசிரியர் களும் குறிப்பிடத் தக்கவர்கள்.

கேள்வி: இதுவரை எத்தனை புத்தாக்கங்களை செய்துள்ளீர்கள்?

பதில்: எல்லாமாக 21 பொருள்களைக் கண்டு பிடித்துள்ளேன். (முக்கிய பொருள்களின் விடயங்கள் முன்னர் தரப்பட்டுள்ளன).

கேள்வி: எங்கெங்கு இடம்பெற்ற கண்காட்சிகளில் புத்தாக்கங்களை காட்சிப்படுத்தினீர்கள்?

பதில்: வேம்படி மகளிர் கல்லூரி யில் நடைபெற்ற இலங்கை புத்தாக்க ஆணைக் குழுவின் கண்காட்சியில் 12 பொருள்களை காட்சிப்படுத்தினேன். அவற்றுள் ஓட்டோ மெற்றிக் சோலர் பனல், சிம்பிள் மெசறிங் ரேப் என்னும் இரண்டிற்கும் விசேட திறமைச் சான்றிதழ் வழங்கினர். ஏனைய பொருள் களுக்கு எனது பெயரில் திறமைச் சான்றி தழ்கள் வழங்கப்பட்டன.


அண்மையில் இடம்பெற்ற 'யாழ்ப் பாணத்துக்கான எமது நோக்கு' என்னும் கண்காட்சியிலும் பங்கு பற்றினேன். இலகுவாக நீர் இறைக்கும் இயந்திரம், போன் சார்ஜ் செய்யும் சப்பாத்து, றெஜிபோம் கட்டர், குறைந்த மின்சாரத்தில் ஒளிரும் மின்குமிழ் முதலியவற்றைக் காட்சிப்படுத்தினேன். இதைப் பார்த்த யாழ்ப்பாண மக்களும், கொழும்பிலிருந்து வந்தவர்களும் என்னைப் பாராட்டினர்.

கேள்வி: உங்களது எதிர்கால இலட்சியம் என்ன?

பதில்: பட்டதாரியாக வருவதுடன் நான் கண்டு பிடித்த பொருள்களை பெருமளவில் உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவது தான் எனது ஒரே இலட்சியம்.

கேள்வி: இதற்கு எத்தகைய உதவிகளை எதிர்பார்க்கிறீர்கள்?

பதில்: எனது குடும்பம் போதிய பொருளாதார வசதியற்றது. எனவே இவற்றைச் செய்ய எனக்கு பெருமளவில் நிதி தேவைப்படுகிறது. போதிய மூலதனத்தை இட்டு இப்பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய கொழும்பு நிறுவனங்களுடன் சேர்ந்து பணியாற்றவும் தயாராக இருக்கிறேன். சமூக சேவை அமைச்சரிடம் இருந்தும் உதவி கிடைக்குமென எதிர்பார்க்கிறேன். மேலும் அரசசார்பற்ற நிறுவனங்கள், வங்கிகள் போன்றவற்றிடமிருந்து உதவி ஊக்குவிப்புக்களை எதிர்பார்க்கிறேன். தற்போது இயங்கும் உற்பத்தி நிறுவனங்களுக்குப் புதிய பொருள்கள் தேவைப்படால் அவற்றைக் கண்டு பிடித்துத் தரவும் ஆவலோடு இருக்கிறேன்.



செவ்வி:
ம.பா.மகாலிங்கசிவம்


# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர்
## செல்வேந்திரா பிரதீப்குமார்

தோற்றம் : 28.12.1977 மறைவு : 10.04.2006

திதி : துவாதசி (06.04.2009)

காற்றோடு நீ கலந்து
இன்றோடு ஆண்டு மூன்று
நேற்றுவரை தேடி விட்டோம்
எம்மிடம் நீ வரவில்லை
எவ்விடம் நீ சென்று விட்டாய்
என்று தினம் ஏங்குகின்றோம்
பார்த்திருந்த பல பொழுதுகள்
பலனின்றியே போனாலும்
வாழும் வரை உனைத் தினம்
வாசலிலே எதிர்பார்த்திருப்போம்.

தகவல்: தம்பி.

பங்களா லேன், மல்லாகம்.

(64171)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துகளின் பெரும்போர்; நாளை அமைதியாக ஆரம்பம்!

'இந்துக்களின் பெரும்போர்' என வர்ணிக்கப்படும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையேயான இரண்டு நாள் கிரிக்கெட் போட்டி நாளை செவ்வாய்க் கிழமை அமைதியாக ஆரம்பமாக்வுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ள இப்போட்டியில் இரு அணிகளும் சம பலம்வாய்ந்த நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஏற்கனவே பாடசாலை மட்டங்களில் இடம்பெற்ற ஐந்து போட்டிகளில் விளையாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியினர் இதற்கு மேலதிகமாகப் பயிற்சி ஆட்டங்களிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றார்கள்.

இதேபோன்று கொக்குவில் இந்துக் கல்லூரியும் பாடசாலை மட்டத்தில் ஏழு போட்டிகளில் விளையாடியுள்ளதுடன் ஒரு மட்டுப்படுத்திய ஓவர் போட்டியிலும் விளையாடியுள்ளது. இதற்கு மேலாகப் பயிற்சி ஆட்டங்களிலும் ஈடுபட்டுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரியைப் பொறுத்த வரையில் தான் விளையாடிய இன்னிங்ஸ் போட்டிகள் ஏழில் வெற்றி பெற்றுள்ளது. இதேவேளை நான் கில் தோல்வியையும் தழுவி யுள்ளது.


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தான் விளையாடிய ஐந்து போட்டிகளில் இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது. இதே வேளை இரண்டு போட்டிகளில் முதலாவது இன்னிங்சினால் .தோல்வியையும், ஒரு போட்டியில் முதலாவது இன்னிங்சினால் வெற்றி பெற்றும் உள்ளது.

இந்துக்களின் பெரும் போரில் கொக்குவில் இந்துக் கல்லூரி இம்முறை வி. ஜனார்த்தனன் தலைமையில் களமிறங்கவுள்ளது.

ஆர்.நிருஜன் (அணியின் உப தலைவர்) நான்காவது வருடமாகவும், வி. ஜனார்த்தனன் (அணித்தலைவர்) கே.நிரோஜன், எஸ்.நிரோஜன் ஆகியோர் மூன்றாவது வருடமாகவும் கே.ஜனுதாஸ், என். ஜசகுலன், எஸ்.மயூரன், எஸ்.உத்தமகுமாரன் ஆகியோர் இரண்டாவது வருடமாகவும் பி.தீபன் என்.கார்த்திக், ஆர்.பகீந்திரன், பி.பங்குஜன், கே.இராகுலன், கே.பிரதீப், பி.பவிராஜ், எஸ்.சாம்பவன் ஆகியோர் முதலாம் வருட வீரர்களாகவும் களமிறங்கக் காத்திருக்கின்றனர்.



கொக்குவில் இந்து அணியினர்



யாழ். இந்து அணியினர்

## வெற்றி தோல்வியை தீர்மானிக்க சமபலத்துடன் களமிறங்கும் அணிகள்

போதியளவு வேகப் பந்து வீச்சாளர்களையும் சுழல் பந்து வீச்சாளர்களை யும் கொண்டுள்ளதுடன் பலமான துடுப்பாட்ட வீரர்களையும் கொண்டதாக கொக்குவில் இந்து விளங்குகின்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி எ.பிரியதர்சன் தலைமையில் களமிறங்கவுள்ளது. இந்த அணியிலும் கூட சிறந்த அனுபவம் மிக்க வீரர்கள் காணப்படுகின்றனர். இதேவேளை இந்த வருடம் முதல் முறையாக விளையாடும் வீரர்களும் காணப்படுகின்றார்கள். இவர்கள் விளையாடிய போட்டிகளில் ஒரு சதத்தைப் பூர்த்தி செய்த வீரர்கள் அரைச் சதம் பெற்ற வீரர்கள் என ஏழுபேர் காணப்படுகின்றார்கள். பந்து வீச்சைப் பொறுத்தவரையிலும் கூட ஏழு வேகப் பந்து வீச்சாளர்களையும் மூன்று சுழல் பந்து வீச்சாளர்களையும் கொண்ட அணியாகக் காணப்படும் வேளையில் துடுப்பாட்டத்திலும் கூட சிறப்பாக பிரகாசிக்கும் வீரர்களும் யாழ்.இந்து அணியில் காணப்படுகின்றார்கள்.

எ.பிரியதர்சன் (அணித்தலைவர்), எஸ்.பாசுதன் (அணியின் உப தலைவர்), ஜி.டிலான், பி.சங்கீதன், கே.அஜித், என். சுதாகரன், எஸ்.உமாதரன், எஸ். பிரசன்னா, ஆர்.நிருஜன், எஸ்.செந்தூரன்,

**தொகுப்பு: நேசன்**

ஆர்.அனோஜன், எம்.துஜீபன், ஜி.பிரகாஸ், என்.திருத்தணிகன், கே.கிருசோபன், கே.கஜலக்ஸ்ஜன் ஆகியோரைக் கொண்ட அணியாகக் கள மிறங்கி மோதவுள்ளது யாழ்.இந்து அணி!

*இம்முறை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் செவ்வாய், புதன் ஆகிய இரு தினங்களும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி, மாலை 4.30க்கு இந்துகளின் பெரும் போர் நிறைவடையும்.*





வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள உறவுகளுக்கு உதவுதல் தொடர்பாக இந்து ஆலயங்களின் தர்மகர்த்தா சபைகளின் பிரதிநிதிகளுடன் இந்து அமைப்புக்கள் ஒன்றியம் நல்லை ஆதீனத்தில் நடத்திய கலந்துரையாட லின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

இந்து அமைப்புகளின் ஒன்றியப் பிரதிநிதிகள் கலந்துரையாடலில் ஈடுபட்டிருப்பதையும், யாழ்.பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலய நிதியத்தின் உதவித் தொகையை இ.ஜெகதீஸ்வரன் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் ஊழியர்களது ஒரு நாள் சம்பளத்திற்கான காசோலையை சபையின் செயலாளர் த.நடராசா ஆகியோர் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளிடம் வழங்குவதையும்

நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன், நேசன்)

# தவக்காலச் சிந்தனை



## இரண்டு மனம்

(யோ 12:1 - 11)

மார்த்தா மரியா குடும்பத்தில் உற்ற நண்பர் இயேசுயெருசலேமில் இடநெருக்கடியான பாஸ்கா காலத்தில் பயணிகள் பெத்தானியாவில் தங்குவது வழக்கம். நாடோடி வாழ்வு வாழ்ந்த இயேசுவும் பெத்தானியாவில் மார்த்தா மரியா வீட்டில் தங்கினார் அங்கு நடந்த நிகழ்ச்சியையே யோ: 12:1 -11 இந்த நற்செய்தியில் இரண்டு மனனிலை கொண்ட உள்ளங்களைச் சந்திக்கிறோம். ஒன்று ஆண்டவர் காலடியில் அமர்ந்து அவருடைய வார்த்தைக்கு செவிசாய் அவருடைய இல்லத்திலும் அடைக்கலம் கொடுத்தவள் மரியா ''அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்?'' எனவே மரியா விலையுயர்ந்த பரிமளதைலம் கொண்டு வந்து ஆண்டவ்ரின் பாதத்தில் பூசினாள். ''விலையுயர்ந்த'' ''நல்ல'' என்ற ஒவ்வொரு சொல்லும் அவளின் அன்புக்கு சான்று யூதமக்களின் மரபின்படி தலைக்கு எண்ணை பூசி வரவேற்பதையே ஒருவர் பெருமையாக எண்ணுவார். மரியாளோ ஆண்டவரின் தலையைத் தொட அருகதை அற்றவராய் பாதத்தில் எண்ணைபூசி கூந்தலால் துடைத்தாள் இச்செயல் மூலம் அவள் தன்னுடைய தாழ்ச்சியை வெளிப்படுத்தினாள். யூத பாரம்பரியத்தின் படி ஒரு பெண் கூந்தலைத் துடைப்பதோ மற்றவரின் பாதத்தை துடைப்பதோ செய்யும் செயல் அன்று சுற்றுச் சூழலைப் பற்றி கவலைப்படாது தன் பணியை செய்கிறாள்.

இரண்டாவது காட்டிக் கொடுத்த யூதாசின் மனநிலை. இவன் காட்டிக் கொடுத்த யூதாஸ்கரியோத் என்றே அறிமுகப்படுத்தப்படுகிறான். இவன் பேயாய் இருக்கிறான் என்றார் இயேசு. ''இயேசுவை நான் உங்களுக்குக் காட்டிக் கொடுத்தால் எனக்கு என்ன தருவீர்கள்'' என்று விலை பேசியவன். ஏன் இந்த வீண் செலவு என்று ஏழைகள் மீது கொண்ட இரக்கத்தால் அல்ல அப்பணத்திலிருந்து சிறிது திருடிக் கொள்ளலாம் என்றே அப்படிக் கூறினான். காசே அவனது கடவுள். மரியாளின் நற்செயலையும் பண அடிப்படையில் தான் எடை போட்டான். ஆரம்பத்தில் அவனை தொற்றிக் கொண்ட காசாசை பேராசையாக மாறியது. கடவுளை காட்டிக் கொடுக் கும் துரோக செயலை செய்யத் தூண்டியது. செல்வம் தன்னிலே தீய தன்று எனினும் அதையே தெய்வமாக மதித்து வழிபடுவர் அதனாலேயே அழிவர் என்பதற்கு யூதாஸ் ஓர் எடுத்துக்காட்டு. ஆகவே தான் இயேசு கூறினார் ''மண்ணுலகில் உங்களுக்கென செல்வத்தை சேமித்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும், துருவும் அழித்துவிடும்'' (மத் 6:9) இன்னுமொரு இடத்தில் இயேசு கூறுகிறார் ''பணக்காரரே உங்களுக்கு ஐயோ கேடு'' (லூக் 6:24) என்று யேசு எச்சரிக்கிறார். இந்த இரண்டு மனங்களில் நாம் எந்த மனத்தை கொண்டவர்கள். இறைவனை நிராகரிப்பதை விட ஏதையும் இழக்கத் தயாரா? அல்லது அற்ப ஆதாரத்துக்காக ஆண்டவரையே விலை பேசுகிறோமா? சிந்திப்போம்.

நசரேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினேழாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
10 ★ 05 ★ 1926



மறைவு
15 ★ 03 ★ 1992

## அமரர் காசிப்பிள்ளை சபாரத்தினம்

திதி: 06.04.2009

அன்பாலும் பண்பாலும் எல்லோரையும்
அரவணைத்த எம் அன்புப் பப்பாவே!
நீளாத்துயில் கொண்டு பதினேழு ஆண்டுகள்
சென்றாலும் அகலவில்லை உங்கள் நினைவுகள்.


உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். (சி/557816)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
17★04★1935

மறைவு
18★03★2008



## திருமதி தம்பிராசா இராஜேஸ்வரி

திதி: வளர்பிறை துவாதசி (06.04.2009)

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் எங்கள் உள்ளத்தில்
நீங்கா நினைவுடன் வாழும் எங்கள் அம்மாவே!
உங்களின் ஆத்மா சாந்தியடைய இந்த முதலாமாண்டு நினைவு
நாளில் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

நீர்வேலி மேற்கு,
நீர்வேலி. (சி/557820) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## செல்லத்துரை நல்லநாதன்

நீர்வேலி, கந்தசாமி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை நல்லநாதன் நேற்று (05.04.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வராணியின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
பிரதீஸ்வரன்- மகன்
(கஸ்தூரி களஞ்சியம், திருநெல்வேலி).

கோணாவளை வீதி,
கொக்குவில் கிழக்கு.
(84178)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



## அமரர் சண்முகநாதன் ரவிச்சந்தர்

தோற்றம்
12.05.1965

மறைவு
05.03.2009

கடந்த 05.03.2009 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்பு மகனின் அந்தியேட்டிக் கிருத்தியமும், வீட்டுக்கிருத்தியமும் இன்று (06.04.2009) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தாய், சகோதரர்கள், மச்சான்மார்.
பத்தானைக்கேணி, தொல்புரம். (83983)

# இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
இல. 19,முருகேசர் லேன், நல்லூர். (84122)

# தவறிவிட்டது

கற்பகப் பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கு, சுன்னாகம் என்னும் முகவரியைச் சேர்ந்த பழனிவேல் சசிகலா என்பவரது தேசிய அ.அட்டை (806614114V), விசேட அ.அட்டை, யாழ்.மாவட்ட சித்த மருத்துவ கூட்டுறவுச் சங்க அ.அட்டை என்பன 03.04.2009 அன்று கொக்குவில், சம்பியன் லேனில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள். யாழ்.மாவட்ட சித்த மருத்துவ உற்பத்தி கூட்டுறவுச் சங்கம், K.K.S.வீதி, கொக்குவில் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும் சன்மானம் வழங்கப்படும்.

# தவறிவிட்டது

2ஆம், குறுக்குத் தெரு, பருத்தித்துறை என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி ரத்ணா சுதாகர் என்பவரின் பாஸ்போட் (N.1116423) கடந்த வெள்ளிக்கிழமை (03.04.2009) மாலை 4.05-4.30 மணிக்கிடையில் நெல்லியடிக்கும் பருத்தித்துறைக்குமிடையில் இ.போ.ச.பஸ்சில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தொ.பே. இல.: 226 3015

# தவறிவிட்டது

பலாலி கிழக்கு, வசாவிளான் என்னும் விலாசமுடைய இராசரத்தினம் மயூரவதனி என்பவரது தேசிய அடையாள அட்டை (847651539V), விசேட அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் என்பன இணுவில் பகுதியில் தவற விடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கே.கே.எஸ்.வீதி, இணுவிலில் உள்ள சாளினி புத்தகசாலையில் ஒப்படைத்து தவவும். (சி/557817)

# விற்பனைக்குண்டு

கோப்பாய் மத்தியில் கண்ணகி அம்மன் கோயிலுக்கும் கோப்பாய் கல்வியியற் கல்லூரிக்கும் அண்மையாக 4 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: திருமதி மதிவதனி நடேசு.
தொ.பே.: 021 222 5070 (84012)

# மகளிர் தின விழா

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ். பிரதேச செயலகத்தில் மகளிர் தின விழா இன்று திங்கட்கிழமை மு.ப. 9 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிரதேச செயலர் ம.ஜெகூ கலந்து கொள்ளவுள்ளார். (9)

# செயலமர்வு

மண்டுவில், ஏப்.6

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் சைவசமய பாடம் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வு இன்று திங்கட்கிழமை காலை 8 மணியளவில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கேட்டுள்ளார். (04-9-59)

# ஊறுவிளைவிக்கும் நிலையில் உள்ள மரங்களைத் தறிக்க நடவடிக்கை

வடமராட்சி, ஏப்.6

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் ஊறு விளைவிக்கக் கூடிய மரங்களை தறிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மக்களுக்கு ஊறு விளைவிக்கும் நிலையில் உள்ள மரங்களை தாமதமின்றி தறிக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட வேண்டும் என வடமராட்சி வடக்குப் பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் பிரதேச செயலருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதனையடுத்து வனபரிபாலன திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு குறித்த மரங்களைத் தறிக்க இப்பிரதேசத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு பிரதேச செயலாளர் இ.வரதீஸ்வரன் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அத்துடன் மரங்களைக் கொண்டு செல்வதற்கு அனுமதியை பிரதேச செயலரிடமும், மரங்கள் விற்பதாயின் அதற்கான அனுமதியை மரக் கூட்டுத்தாபனத்திடமும் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (04-236)

# வாழைக்குலைத் திருட்டுகள் கோப்பாயில் அதிகரிப்பு

கோப்பாய், ஏப்.6

கோப்பாய், நீர்வேலி பிரதேசங்களில் வாழைக்குலைகள் திருடும் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுவதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த வாரங்களில் முன்னிரவு வேளைகளில் தோட்டங்களில் உள்நுழைந்த திருடர்கள் அரைமுற்றல் நிலையில் உள்ள வாழைக்குலைகளை பலவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

இதனால் வாழைக்குலைகளை பாதுகாப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக விவசாயிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். தற்போது கதலிப்பழம் கிலோ 200 ரூபா வரையும், இதரை இனம் 60 ரூபா தொடக்கம் 90 ரூபா வரையும் சந்தைகளில் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்ற சூழலில், இத்தகைய திருட்டுகள் நடைபெறுவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். (04-72)

# நெஞ்சினை உருக்கும் அகவை ஒன்று நினைவலைகள்

இன்ப பூமியில்
11 ★ 05 ★ 1937



இறைவன் அடியில்
06 ★ 04 ★ 2008

## அமரர் ஞானப்பிரகாசம் சவரிமுத்து

ஆண்டொன்று சென்றதோ... உங்களுடைய
பிரிவை எமக்குள் புதைத்து விட்டு வெகுதூரம் சென்று விட்டீர்களே
புன்முறுவல் முகமும், புன்சிரிப்பும் அமையக் கொண்டவரே
உம் பிரிவால் இல்லம் இருளாகி விட்டது. ஆண்டவா எமக்கு ஏன் இந்தக்
கொடுமை தந்தாய்! மெழுகாக உருகி எம்மைக் காத்த அன்புத் தெய்வமே!
நீங்கள் எம்மை பிரிந்து போன நாளிலிருந்து தவிக்கின்றோம்
நீங்கள் எம்மை தவிக்கவிட்டு உங்கள் மூச்சை ஏன் நிறுத்திவீர்கள்
தெய்வமே மீண்டும் எம் சூரியன் கிழக்கு வானில் தெரிகிறது
தெய்வமே மீண்டும் உங்கள் வரவிற்காக எதிர்பார்த்து விழிபூத்து நிற்கின்றோம்!
உங்கள் உருவமும் புன்சிரிப்பு முகமும் என்றும் துடிக்கின்ற எம் இமைகளின்
இடுக்கினில் வாழ்கின்றது.

எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர்.

3ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை. (84180)

# மரண அறிவித்தல்

## செல்லப்பா கார்த்திகேசு



கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா கார்த்திகேசு நேற்று (05.04.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார்செல்லப்பா- செல்லாச்சி தம்பதியரின் மகனும் வில்லவராயர்- வேதநாயகம் தம்பதியரின் மருமகனும் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் தர்மகுலசிங்கம் (கனடா), குமாரகுலசிங்கம் (கனடா), கோபாலகுலசிங்கம் (கனடா), உதயகுமாரி (கனடா), இலங்காராணி (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), வில்லவராயசிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலராணி (கனடா), பரிமளவதனி (கனடா), சறோஜினி (கனடா), மோகனதாஸ் (கனடா), ஜெயக்குமார் (முகாமையாளர், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சிறுப்பிட்டி), பேபிசுசிலா ஆகியோரின் அன்பு மாமனும் றெவின், அனோஸ், சுஜன், யதூர்ஷன், சாருகா, தாட்சாயினி, வினித்தா, பானுகா, திவ்வியா, நர்மதன் (மாணவன், யா/கைதடி குருசாமி வித்தியாலயம்), சாருமதி (கைதடி வடக்கு கலைமகள் முன்பள்ளி), கோபிகன், நிலாவிழி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சின்னையா, இராசையா, குருசாமி, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்லம்மா, சுப்பையா, காலஞ்சென்ற குமாரசாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் உதயஞானதேவி (லண்டன்), உதயயோகேஸ்வரி ஆகியோரின் அன்புப் பெரியதந்தையும் பிரணவன், நிந்துகா, சதூஷிகா ஆகியோரின் அன்புப் பெரிய பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2009) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜெயக்குமார் (மருமகன்),
இலங்காராணி (மகள்).

நீர்வேலி றோட்,
கைதடி வடக்கு, கைதடி. (84179)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர் மீதான கொடுமைகள்; இலங்கையைக் கண்டிக்கிறார் ஜெயலலிதா!

## சிறைப்பிடிக்கப்பட்ட மீனவரை மீட்குமாறு மத்திய - மாநில அரசுகளிடம் வலியுறுத்து



மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட விருப்பு மனு அளித்தவர்களிடம் கட்சியின் பொதுச்செயலாளர் ஜெயலலிதா அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நேர்காணல் நடத்தியபோது........

சென்னை, ஏப். 06

**இலங்கைக் கடற்படையினர், தமிழக மீனவர்களைக் கடுமையாகத் தாக்கி கச்சதீவில் கொளுத்தும் வெயிலில் சுடுமணலில் வெற்று உடம்புடன் படுக்க வைத்து கொடுமைப்படுத்தியுள்ளனர். இலங்கையின் இத்தகைய தகாத செயல்களுக்கு எனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன் - என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா கூறியுள்ளார்.**

**மேலும் இலங்கைக் கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டும்" - என்றும் வலியுறுத்தியுள்ளார்.**

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இந்தியக் கடல் எல்லைப்பகுதியில் மீன் பிடித்து கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் 23 பேரை 2.4.2009 அன்று இலங்கைக் கடற்படையினர் சிறைப்பிடித்து அவர்களுடைய விசைப்படகுகளை பறிமுதல் செய்திருக்கின்றனர். கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி 3.4.2009 முதல் இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த வேதனையான சூழ்நிலையில் தமிழக மீனவர்களை மேலும் பாதிக்கும் விதமாக கடந்த 3ஆம் திகதி அன்று பாம்பன் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் 50க்கும் மேற்பட்ட நாட்டுப் படகுகளில் கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, படகுகளில் வந்த இலங்கைக் கடற்படையினர் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டபடி மீனவர்களை சுற்றி வளைத்து அவர்களைக் கடுமையாகத் தாக்கி கச்சதீவில் கொளுத்தும் வெயிலில் சுடு மணலில் வெற்று உடம்புடன் படுக்க வைத்து கொடுமைப்படுத்தியுள்ளனர்.

மேலும் மீனவர்களிடம் இருந்த மீன்பிடி சாதனங்களையும், அவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களையும் கடலில் வீசி எறிந்துள்ள கொடுமையும் நடைபெற்றிருக்கிறது. இலங்கைக் கடற்படையினரின் தகாத செயல்களுக்கு எனது கடுமையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன். மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் எனக்கு மிகுந்த வேதனையையும், அதிர்ச்சியையும் அளிக்கிறது.

தமிழக மீனவர்களின் பாதுகாப்பிற்கு தேவையான நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் எடுக்க வேண்டும் என்று நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். ஆனால் மத்திய, மாநில அரசுகள் இதுவரை எந்த உறுதியான நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை. அதனால்தான் இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர்.

உடனடியாக சிறைபிடிக்கப்பட்ட 23 மீனவர்களையும், பறிமுதல் செய்யப்பட்டுள்ள படகுகளையும் விடுவிப்பதற்கு மத்திய, மாநில அரசுகள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

## கடலூர் மாவட்டத்தில் சோழர் காலத்து கல்வெட்டு, பானை ஓடுகள் கண்டுபிடிப்பு

### வரலாற்று ஆய்வாளர்கள் தகவல்

நெய்வேலி, ஏப். 06

கடலூர் மாவட்டத்தில் கி.பி. 13 - 14ஆம் நூற்றாண்டு கால கல்வெட்டுகள், பானை ஓடுகள் என்பன கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவை சோழர் காலத்து கல்வெட்டுகள் எனக் கண்டறியப்பட்டது. இதுகுறித்த விவரம் வருமாறு-

கடலூர் மாவட்டம் வடலூர் அருகே சந்தவெளிப்பேட்டை கிராமத்தில் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக வரலாற்று துறைத் தலைவர் அழகப்பன் தலைமையில், தொல்லியல் ஆய்வாளர்கள் சிவராமகிருஷ்ணன், கண்ணன், கலைச்செல்வன் ஆகியோர் கடந்த 2 வாரமாக கள ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.

இது குறித்து வரலாற்றுத்துறைத் தலைவர் அழகப்பன் கூறியவை வருமாறு -

கோட்டை மேட்டுப்பகுதியில் வீதி அமைக்க மண் எடுத்த பள்ளத்தில் ஏராளமான பானை ஓடுகள், செங்கற்கள் காணப்பட்டன. இந்தக் கூரை ஓடுகள், கங்கை கொண்ட சோழபுரம் மாளிகை மேட்டுப்பகுதியில் நடந்த அகழாய்வில் கிடைத்துள்ள கூரை ஓடுகளை போல் உள்ளன.

இதன் மூலம் இப்பகுதியில் கி.பி. 11 - 12 ஆம் நூற்றாண்டுகளில் ஒரு இடைக்கால ஊரிருக்கைப் பகுதி இருந்தது என்பதை அறிய முடிகிறது. தங்கராசு என்பவரின் முந்திரித்தோப்பில் மேற்பரப்பு கள ஆய்வு செய்தபோது அங்கு ஏறத்தாழ 2 ஏக்கர் பரப்பளவில் ஊரிருக்கையின் தடயங்கள் பரவி கிடக்கின்றன.

அந்தப் பகுதியில் பழங்கால கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது. இக்கல்வெட்டு வரிகள் பெரும்பாலும் சிதைந்துள்ளன. கல்வெட்டின் காலம் கி.பி. 13 - 14ஆம் நூற்றாண்டுகள் எனக் கணிக்க முடிகிறது.

சந்தவெளிபேட்டையில் புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பொருள்களை ஆதாரமாக கொண்டு இவ்வூரில் கி.பி. 10ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 18ஆம் நூற்றாண்டு வரை சோழர் கால கோயில்களும், கோயிலை சார்ந்த ஊரிருக்கைப் பகுதியும் சிறப்புற்று இருந்தன என்பதை அறிய முடிகிறது.

சந்தவெளிப்பேட்டையில் இதுவரை கண்டறியப்பட்டுள்ள தொல் பொருள்களின் மூலம் இங்கு கி.பி. 3ஆம் நூற்றாண்டிலிருந்து, 18 ஆம் நூற்றாண்டு வரை மக்களின் பண்பாடு தொடர்ச்சியாக இருந்து வந்துள்ளது என்பதை இதன் மூலம் உணர முடிகிறது - என்றார்.

# தமிழக மீனவர் மீது தாக்குதல்

## ரி.வி., பத்திரிகைக்குப் பேட்டி கொடுத்தால் மீண்டும் தாக்குவோம் என எச்சரிக்கையாம்!

இராமேஸ்வரம், ஏப். 06

நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இராமேஸ்வரம் மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் விரட்டி விரட்டி தாக்குதல் நடத்தினர் - என்று காயமடைந்த மீனவர்கள் தெரிவித்துள்ளனர் எனத் தமிழக நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

இராமேஸ்வரம் அருகே உள்ள பாம்பன் பகுதியிலிருந்து 60க்கும் மேற்பட்ட நாட்டுப் படகுகள் கடந்த வெள்ளிக்கிழமை கச்சதீவு அருகே நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தன. அப்போது அந்த வழியாக துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதம் பொருத்தப்பட்ட சிறிய கப்பல்களில் இலங்கைக் கடற்படையினர் ரோந்து வந்தனர்.

அவர்கள் மீன்பிடிப் படகுகளை கண்டதும் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு படகுகளை சுற்றி வளைத்தனர். மேலும் 20க்கும் மேற்பட்ட படகுகளில் இறங்கி மீனவர்களை கண் மூடித்தனமாகத் தாக்கியதுடன் துப்பாக்கி முனையில் மிரட்டி மீனவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களை அள்ளிக்கொண்டும், மீன்பிடி சாதனங்களை கடலில் வீசி சேதப்படுத்தினார்களாம். இதனால் அச்சமடைந்த மீனவர்கள் உயிர் பிழைத்தால் போதும் என்று பாதியிலேயே வெறும் படகுகளுடன் கரை திரும்பினர்.

இலங்கைக் கடற்படையினர் தாக்கியதில் பாம்பனைச் சேர்ந்த சேவியர், பிச்சை, சேசு ஆபர்ணம் உட்பட 100க்கும் மேற்பட்ட மீனவர்கள் காயம் அடைந்துள்ளனர்.

இலங்கை கடற்படை தாக்கியமை குறித்து காயமடைந்த மீனவர்கள் கூறியவை வருமாறு-

கடந்த 3ஆம் திகதி பாம்பனிலிருந்து நாட்டுப்படகுகளில் கடலுக்குள் மீன் பிடிக்க சென்றோம். நாங்கள் இந்தியக் கடல் எல்லையில் கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது 8 சிறிய கப்பல்களில் வந்த இலங்கைக் கடற்படையினர், 35க்கும் மேற்பட்ட மீனவரின் நாட்டுப் படகுகளை, இலங்கைக் கடல் எல்லைக்குள் விரட்டிச் சென்றனர்.

பின்னர் அங்கு அனைத்து படகுகளையும் சுற்றி வளைத்து மீனவர்களை கண் மூடித்தனமாகத் தாக்கி நிர்வாணப்படுத்தினர். மீன்களை அள்ளிக்கொண்டதுடன் மீன்பிடி சாதனங்களையும் சேதப்படுத்தினர். இதையடுத்து பிச்சை என்பவர் கையடக்கத் தொலைபேசி மூலம் நாட்டுப்படகு உரிமையாளர் சேசுவுக்கு தகவல் கொடுத்தார். அவர் இந்தியக் கடற்படையிடம் நடந்த சம்பவம் பற்றி கூறினார்.

இதையடுத்து இந்தியக் கடற்படையினர் இலங்கைக் கடற்படையினருடன் தொடர்பு கொண்டு பேசினர். இதையடுத்து அவர்கள் எங்களை எச்சரிக்கை செய்து அனுப்பி வைத்தனர். மேலும், நடந்த சம்பவம் குறித்து, தொலைக்காட்சி, பத்திரிகைகளில் பேட்டி கொடுத்தால் அதை நாங்கள் பதிவு செய்வோம். மீண்டும் இந்தப் பகுதியில் மீன் பிடிக்க வரும்போது கடுமையாகத் தாக்குதல் நடத்துவோம் என்று எச்சரித்தனர். தொடர்ந்து நடந்து வரும் இதுபோன்ற சம்பவத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க மத்திய - மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர்.

## ஈழத் தமிழருக்கு அரசியல் உரிமைகளை பெற்றுக்கொடுக்க தே.மு.தி.க. பாடுபடும்

### முரசுக்கு வாக்களிக்கக் கோருகிறார் விஜயகாந்த்



சென்னை, ஏப். 06

தேர்தலில் தே.மு.தி.க. தேர்ந்தெடுக்கப்பட்டால் காவிரி பிரச்சினை முதல் கச்சதீவுப் பிரச்சினை வரை தீர்வு காணப்படும். அன்றாடம் இலங்கையில் செத்துமடியும் தமிழர்களுக்கு, உரிய அரசியல் உரிமைகளைப் பெற தோள்கொடுக்கும். - என்று அக்கட்சியின் தலைவர் விஜயகாந்த் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

தே.மு.தி.க. முதன் முதலாக நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திக்கிறது. இதர அரசியல் கட்சிகள் கூட்டணி அமைத்து போட்டியிடுகின்றன. ஆனால், தே.மு.தி.க. மக்களையும், தெய்வத்தையும் நம்பி தமிழ்நாட்டு மக்களின் சார்பாக இந்தத் தேர்தலைச் சந்திக்கிறது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரஸ் போன்ற கட்சிகள் மத்திய அரசில் இடம்பெற்றும், தமிழ்நாட்டிற்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்ந்த வண்ணம்தான் உள்ளன. தே.மு.தி.க. தமிழக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டால், இதுவரை தீர்க்கப்படாத காவிரிப் பிரச்சினை முதல் கச்சதீவுப் பிரச்சினை வரை அத்தனை பிரச்சினைகளையும் தீர்க்கப் பாடுபடுவோம்.

நிர்வாகத்தில் லஞ்ச, ஊழலுக்கு இடம் அளிக்காமல், வறுமை, வேலையின்மை, விலைவாசி உயர்வு, பெற்றோல் தட்டுப்பாடு, மின்சாரப் பற்றாக்குறை, குடிதண்ணீர் இன்மை, சமச்சீர் கல்வி போன்ற மக்கள் பிரச்சினைகளில் அனைத்து மக்களும் சமவாய்ப்பு பெற வழிவகுப்போம். குறிப்பாக அன்றாடம் இலங்கையில் செத்துமடியும் தமிழர்களுக்கு, உரிய அரசியல் உரிமைகளைப் பெற தே.மு.தி.க. தோள்கொடுக்கும்.

ஜனநாயகம் மலரும் வகையில் ஒரு புதிய அரசியலை தருவோம். சாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டு அனைத்து மக்களும் சமமாக பாவிக்கப்படுவர்.

அனைத்து மக்களும் சமவாழ்வு பெற, தே.மு.தி.க. தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும். பசி, பிணி, பகை இல்லாத மனிதாபிமானமுள்ள ஒரு ஒப்பரிய தமிழகத்தை செப்பனிட தே.மு.தி.கவிற்கு தமிழ்நாட்டு மக்கள் தங்கள் ஆதரவை முரசு சின்னத்தில் வாக்களித்து வெற்றி தேடித்தர வேண்டுகிறேன் - என்றுள்ளது.

# இலங்கைக்குப் பொருள்கள் கடத்த முயற்சி; சென்னையில் புலிச் சந்தேகநபர்கள் கைது!

சென்னை, ஏப். 06

போருக்குத் தேவையான பொருள்களை இலங்கைக்குக் கடத்த முயன்றனர் என சென்னையில் 2 விடுதலைப் புலிச் சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்களுக்கு உடந்தையாக இருந்த மேலும்2 பேரும் பிடிபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சென்னையில் இலங்கையைச் சேர்ந்த 2 நபர்கள் ரகசியமாகச் சந்தித்து பேசுகின்றனர் என கியூப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதைத்தொடர்ந்து அந்த இரு நபர்களையும் பொலிஸார் கைதுசெய்தனர். அவர்களில் ஒருவருடைய பெயர் மகேந்திரன் ஜெகநாதன். மற்றொருவரின் பெயர் அந்தோணி செபஸ்டியன்.

இவர்கள் குறித்து விசாரணையில் வெளியான தகவல்கள் வருமாறு -

லண்டனில் சில காலம் தங்கி இருந்த மகேந்திரன் ஜெகநாதன், தமிழ்நாட்டில் இருந்தபடி விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்யும் நோக்கத்தில் சில தினங்களுக்கு முன் லண்டனில் இருந்து சென்னை வந்தார். சென்னை போரூரில் அவர் தங்கி இருந்தார்.

இலங்கையைச் சேர்ந்தவரான அந்தோணி செபஸ்டியான், சென்னை திருவான்மியூரில் வசித்து வந்தார்.

இவர்கள் தமிழ்நாட்டில் யார்-யாருடன் தொடர்பு வைத்துள்ளனர் என்பது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அப்போது, இலங்கையைச் சேர்ந்த குகன் என்பவருடன் இவர்கள் தொடர்பு வைத்திருப்பதும், அந்த நபர் இராமநாதபுரத்தில் தங்கி இருப்பதும் தெரியவந்தது.

இதைத்தொடர்ந்து, கியூ பொலிஸார் இராமநாதபுரம் சென்று குகனைக் கைது செய்தனர்

மேலும் நடந்த விசாரணையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த ஜெயமோகன் என்ற சபாநாதன் என்பவர் கைது செய்யப்பட்டார். கடலூரைச் சேர்ந்த இவர் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

போர்க்களத்தில் உள்ள விடுதலைப் புலிகளுக்குத் தேவைப்படும் பொருள்களை இலங்கைக்குக் கடத்துவதற்கான முயற்சியில் இவர்கள் ஈடுபட்டு இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

கைதான மகேந்திரன் ஜெகநாதனிடம் இருந்து ஒரு 'லப் டொப்' கணனியும், அந்தோணி செபஸ்டியனிடம் இருந்து ஒரு செயற்கைக்கோள் தொலைபேசியும் கைப்பற்றப்பட்டன. மற்றும் சில பொருள்களும் சிக்கின.

கைது செய்யப்பட்ட 4 பேரையும் கடந்த வெள்ளியிரவு சைதாப்பேட்டை மஜிஸ்திரேட்டு வீட்டில் பொலிஸார் ஆஜர் படுத்தினர். 4 பேரையும் சிறையில் அடைக்க மஜிஸ்திரேட்டு உத்தரவிட்டதைத் தொடர்ந்து, அவர்கள் புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு வெற்றி வாய்ப்பு!



நிதானமாக ஆடி 167 ஓட்டங்களை குவித்த இந்திய அணி வீரர் கம்பீர்...

வெலிங்டனில் நடைபெற்றுவரும் நியூஸிலாந்துக்கு எதிரான 3ஆவது மற்றும் இறுதி கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்தியா தனது 2ஆவது இன்னிங்ஸில் ஓட்டங்களை அபாரமாகக் குவித்துவருகிறது. போட்டியின் 3ஆவது நாளான் நேற்று, ஒரு விக்கெட் இழப்பிற்கு 51 ஓட்டங்கள் என்ற எண்ணிக்கையுடன் ஆட்டத்தை ஆரம்பித்த இந்திய அணி, 5 விக்கெட்டுக்களை இழந்து 349 ஓட்டங்களை எடுத்துள்ளது.

அபாரமாக ஆடிய கௌதம் கம்பீர் 167 ஓட்டங்களைக் குவித்து ஓ பிரையன் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார். டெண்டுல்கர் 9 ஓட்டங்களும், வி.வி.எஸ்.லக்ஷ்மன் 60 ஓட்டங்களையும் சேர்த்து வெளியேறினர். நியூஸிலாந்து அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டஎண்ணிக்கையை விட இந்தியா 531 ஓட்டங்கள் கூடுதலாகப் பெற்றிருப்பதால், இந்தியாவின் வெற்றிவாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

ஏற்கனவே முடிந்துள்ள 2 டெஸ்ட் போட்டிகளில், முதல் டெஸ்டில் இந்தியா வெற்றிபெற்றது. 2ஆவது டெஸ்ட் சமனிலையில் முடிந்தது. 3ஆவது டெஸ்டில் வென்றால் தொடரை 2-0 என்ற கணக்கில் வெல்ல முடியும். 3ஆம் நாள் ஆட்டநேர முடிவில் இந்தியா 5 விக்கெட்டுக்களை இழந்து 349 ஓட்டங்களை எடுத்துள்ளது. டோனி 16 ஓட்டங்களுடனும், யுவராஜ் சிங் 5 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இன்னும் 2 நாள்கள் உள்ளதால் இந்தியா வெற்றிபெறுவது ஏறக்குறைய உறுதியாகியுள்ளது.

## ஐ.பி.எல். முதல் போட்டி டிக்கெட்டுக்கள் காலி!

ஐ.பி.எல். போட்டிகளில் முதல்நாள் ஆட்டத்துக்கான டிக்கெட்டுகள் விற்றுத் தீர்ந்துவிட்டன.கடந்த ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற ஐ.பி.எல். போட்டிகள் பெரும் வெற்றிபெற்றன. இந்த ஆண்டு மக்களவைத் தேர்தலால் இந்தியாவில் போட்டி கள் நடத்தப்படுவது சிக்கலுக்கு உள்ளானதால் போட்டிகள் தென்னாபிரிக்காவுக்கு மாற்றப்பட்டன.

எதிர்வரும் 18ஆம் திகதி ஐ.பி.எல். போட்டிகள் கேப்டவுனில் ஆரம்பமாகவுள்ளன. இதற்கான டிக்கெட் விற்பனை நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

முதல் ஒரு மணி நேரத்திலேயே அனைத்து டிக்கெட்களும் விற்றுத் தீர்ந்துவிட்டன. 2ஆவது நாள் ஆட்டத்துக்கான பெரும்பாலான டிக்கெட்களும் விற்றுவிட்டன.

முதல் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதுகின்றன. அதன் பின்னர் ராஜஸ்தான் மற்றும் பெங்களூர் அணிகள் மோதும் ஆட்டம் நடைபெறுகிறது.

## பிளின்ரொப் ஹற்றிக்; இங்கிலாந்து வெற்றி

செயின்ட் லூசியா, ஏப். 6

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான கடைசி ஆட்டத்தில் வெற்றி பெற்றதன் மூலம், அந்த மண்ணில் முதல் முறையாக ஒரு நாள் தொடரை கைப்பற்றி இங்கிலாந்து அணி புதிய வரலாறு படைத்திருக்கிறது. சகலதுறை வீரர் பிளின்ரொப் 'ஹட்ரிக்' சாதனை நிகழ்த்தினார். மேற்கிந்தியத் தீவுகள் - இங்கிலாந்து அணிகள் இடையிலான 5ஆவது மற்றும் கடைசி ஒரு நாள் கிரிக்கெட் போட்டி செயின்ட் லூசியாவில் நேற்று முன்தினம் நடந்தது.

பலத்த மழையால் 4 மணி நேரம் தாமதமாக தொடங்கிய இந்த ஆட்டம் 29 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது. முதலில் ஆடிய இங்கிலாந்து அணி 29 ஓவர்களில் 5 விக் கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்களை எடுத்தது. பீற்றர்ஸன் 48 ஓட்டங்களையும், ரவி போபரா 44 ஓட்டங்களையும் எடுத்த னர். மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சார் பில் பொல்லார்ட், பென் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், ராம்பால் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பின்னர் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 28 ஓவர்களில் 146 ஓட்டங்களுடன் சுருண்டது. இதனால் இங்கிலாந்து அணி 26 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பிராவோ அதிகபட்சமாக 33 ஓட் டங்களை எடுத்தார்.

இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் பிளின்ரொப் 27ஆவது ஓவரில் 3 ஆவது, 4ஆவது மற்றும் 5ஆவது பந்து களில் முறையே ராம்டின், ராம்பால், பென் ஆகியோரின் விக்கெட்டுகளை தொடர்ந்து வீழ்த்தி 'ஹட்ரிக்' சாதனை படைத்தார். இதன் மூலம் 'ஹட்ரிக்' சாதனை படைத்த 3ஆவது இங்கிலாந்து வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார். இதற்கு முன்பு இங்கிலாந்து வீரர்கள் அன்டர்ஸன், ஹர்மிஸன் ஆகியோர் 'ஹட்ரிக்' சாதனை படைத்துள்ளனர். ஒரு நாள் போட்டியில் நடந்த 25ஆவது 'ஹட்ரிக்' சாதனை இதுவாகும். 19 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை வீழ்த்திய பிளின்ரொப் ஆட்ட நாயகன் விருதுபெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி ஒரு நாள் தொடரை 3-2 என்ற கணக்கில் கைப்பற்றியது. மேற்கிந்தியத் தீவுகளில் இங்கிலாந்து அணி ஒரு நாள் தொடரை வெல்வது இதுவே முதல் முறை யாகும். முன்னதாக டெஸ்ட் தொடரை மேற்கிந்தியத் தீவுகள் அணி 1-0 என்ற கணக்கில் தனதாக்கியது குறிப்பிடத்தக்கது.

## டோனியின் சாதனை

வெலிங்டன் டெஸ்ட் போட்டியில் நேற்று முன்தினம் இந்திய அணித்தலைவரும், விக்கெட் காப்பாளருமான டோனி மொத்தம் 6 விக்கெட்டுகளை பிடியெடுத்து அசத்தினார். இதன் மூலம் ஓர் இன்னிங்ஸில் அதிகூடிய வீரர்களை ஆட்டமிழக்கச்செய்த இந்தியவிக்கெட் காப்பாளர் என்ற சிறப்பை பெற்றிருந்த சையத் கிர்மானியின் சாதனையை அவர் சமன் செய்துள்ளார்.

கிர்மானி 1976ஆம் ஆண்டு கிறைஸ்ட் சர்ச்சில் நடந்த நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்டில் 6 பேரை வெளியேற்றி இருந்தார். அவரைப் போன்றே டோனியும் நியூஸிலாந்து மண்ணிலேயே இந்தச் சிறப்பை பெற்றிருக்கிறார். அதே சமயம் 1930ஆம் ஆண்டு முதல் டெஸ்ட் போட்டி நடந்து வரும் வெலிங்டன் மைதானத்தில், வெளிநாட்டு விக்கெட் காப்பாளர் ஒருவர் இன்னிங்ஸில் 5 மற்றும் அதற்கு மேல் வீரர்களை பிடியெடுத்து ஆட்டமிழக்கச் செய்தது இதுவே முதல் முறையாகும்.

## 'சொனி எரிக்ஸன்' டென்னிஸ் கிண்ணம் கோட்டை விட்டார் செரீனா வில்லியம்ஸ்

### பலறூஸ் நாட்டு வீராங்கனை சம்பியன்

மியாமி, ஏப்.5

அமெரிக்காவில் உள்ள மியாமி நகரில் சொனி எரிக்ஸன் சர்வதேச டென்னிஸ் போட்டி நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் டென்னிஸ் உலகின் முதல்நிலை வீராங்கனை அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸை 6-3, 6-1 என்ற நேர் செற்கணக்கில் தோற்கடித்து சொனி எரிக்ஸன் சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றினார் பலறூஸ் நாட்டு வீராங்கனை விக்ரோறியா அசரென்கா.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் அரை இறுதி ஆட்டத்தில் உலகின் 2ஆம் நிலை வீரர் ரோஜர் பெடரர் 3ஆம் நிலை வீரர் நோவாக் ஜோகோவிச்சை சந்தித்தார்.





வெற்றிக் கிண்ணத்துடன் அசரென்கா

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் ஜோகோவிச் 3-6, 6-2, 6-3 என்ற செற்கணக்கில் பெடரருக்கு அதிர்ச்சி கொடுத்து இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார். இறுதி ஆட்டத்தில் ஜோகோவிச், இங்கிலாந்து வீரர் ஆன்டி முர்ரேவை எதிர்கொள்கிறார்.

அரை இறுதியில் முர்ரே, உலகின் முதல் நிலை வீரர் ரபெல் நடாலை வீழ்த்திய ஆர்ஜென்டினா வீரர் ஜுவான் டெல் போட்ரோவை தோற்கடித்து இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார். பெண்கள் இரட்டையர் அரை இறுதி ஆட்டத்தில் சானியா மிர்சா (இந்தியா) - சுவாங்சியா ஜங் ஜோடி 6-7, 4-6 என்ற நேர் செட்டில் பெச்கே (செக் குடியரசு) - ரேமண்ட் (அமெரிக்கா) ஜோடியிடம் தோல்விகண்டது.

## இந்திய வீரர் டெண்டுல்கருக்கு நியூஸி. முன்னாள் வீரர் புகழாரம்

வெலிங்டன், ஏப். 6

கிரிக்கெட்டின் அனைத்து விதமான பிரிவுகளிலும், சிறப்பாக விளையாடக்கூடிய டெண்டுல்கர் உலகின் சிறந்த துடுப்பாட்டக்காரர் என்று நியூஸிலாந்து அணியின் முன்னாள் சகலதுறை வீரரான ரிச்சாட் ஹாட்லி புகழ்ந்திருக்கிறார். அவுஸ்திரேலிய கிரிக்கெட் ஜாம்பவான் பிரட்மனுடன் ஒப்பிடக் கூடிய சச்சின் டெண்டுல்கர் கிரிக்கெட்டின் அனைத்து விதமான பிரிவுகளுக்கும் ஏற்ப தன்னை மாற்றிக்கொண்டு ஆடும் திறன் படைத்தவர் என்றும் ஹாட்லி கூறியிருக்கிறார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

1990ஆம் ஆண்டு இந்திய அணி இங்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, நான் சச்சினிற்கு எதிராக விளையாடினேன். நேப்பியரில் நடந்த போட்டியில் அவர் 80 அல்லது 90 ஓட்டங்களை எடுத்தார். அப்போது இந்த இளம் வீரரிடம் ஏராளமான திறமை இருக்கிறது என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

20 வருடங்களுக்கு முன்னதாக டெண்டுல்கர் கிரிக்கெட் உலகில் என்ன என்ன சாதிக்கப் போகிறார் என்பதை எங்களால் உணர முடியவில்லை அவர் தொழில் நுணுக்கம் நிறைந்த சிறந்த வீரர்.

டெண்டுல்கர் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் பல சதங்களையும், பல அரை சதங்களையும் அடித்து சாதனை படைத்தவர். இதன் அடிப்படையில் பார்க்கும் போது சச்சின் ஒரு சிறந்த வீரர் தான். புள்ளிகள் பட்டியலின் படி அவர் இந்திய மற்றும் உலக கிரிக்கெட்டிற்கு அர்ப்பணிப்புடன் ஆடி இருக்கிறார். அவர் ஒரு வித்தியா சமான வீரர்.

இந்தியா மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கு இடையே தற்போது 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடந்து வருகிறது. இதன் 3ஆவது மற்றும் இறுதி டெஸ்ட் போட்டி வெலிங்டனில் நடந்து வருகிறது. முன்னதாக நியூஸிலாந்து அணிக்கு எதிராக நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் நட்சத்திர வீரரான டெண்டுல்கர் 160 ஓட்டங்களை எடுத்தார். இது அவரது டெஸ்ட் வாழ்க்கையில் 43ஆவது சதமாகும். அவரது அபாரமான ஆட்டத்தால் இந்திய அணி முதல் டெஸ்டில் அபார வெற்றி பெற்றது - என்று 57 வயதான உலகின் தலைசிறந்த சகலதுறை வீரர்களில் ஒருவரான ஹாட்லி கூறினார்.

## அவுஸ்திரேலியா வெற்றி

டர்பன், ஏப். 6

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 141 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றியை பெற்றது.

ரிக்கி பொண்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்க அணிகள் இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் போட்டி தொடரில் முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி டர்பனில் நேற்றுமுன்தினம் நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவுசெய்தது. நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் அந்த அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 286 ஓட்டங்களை எடுத்தது.



சமீபகாலமாக மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்திய மைக் ஹஸி அபாரமாக ஆடி 79 பந்துகளில் 6 பவுண்டரி, 2 சிக்ஸருடன் 83 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். ஆரம்ப ஆட்டக்காரர்களாக் களமிறங்கிய ஹடின் 53 ஓட்டங்களை எடுத்தார். ரிக்கி பொண்டிங் 37 ஓட்டங்களும், ஹோப்ஸ் 38 ஓட்டங்களும் எடுத்தனர்.

தென்னாபிரிக்க அணி தரப்பில் ஸ்ரெயின், மோர்கல் ஆகியோர் தலா 2 விக்கெட்டும், நிற்னி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பின்னர் 287 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய தென்னாபிரிக்க அணி, அவுஸ்திரேலிய வீரர்களின் அபார பந்து வீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தது. 2ஆவது விக்கெட் இழப்பின் போது ஜோடி சேர்ந்த அணித்தலைவர் ஸ்மித் (52 ஓட்டங்கள்) - கிப்ஸ் (33 ஓட்டங்கள்) மட்டும் ஓரளவு நிலைத்து நின்று ஆடினார்கள். மற்ற வீரர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர்.

33.1 ஓவர்களில் தென்னாபிரிக்க அணி 145 ஓட்டங்களை மாத்திரம் சேர்த்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதனால் அவுஸ்திரேலிய அணி 141 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அவுஸ்திரேலிய அணி தரப்பில் சுழற்பந்து வீச்சாளர் நதன் ஹவுரிட்ஸ் 4 விக்கெட்டுக்களையும், ஜோன்சன், ஹோப்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், பிரக்கன், லாலின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார்கள். மைக் ஹஸி ஆட்டநாயகன் விருது பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் ஐ.சி.சி. ஒரு நாள் அணிகள் தரவரிசையில் அவுஸ்திரேலியா (125 புள்ளி) மீண்டும் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. முதலிடத்தில் இருந்த தென்னாபிரிக்கா (123 புள்ளிகள்) 2 புள்ளிகளை இழந்து 2ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




யாழ். றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் மாதாந்த அதிதிப் பேச்சாளர் தினம் 'உதயன்' கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் கலந்துகொண்ட யாழ். போதனா வைத்தியசாலைப் புற்றுநோய் வைத்திய நிபுணர் என். ஜெயக்குமாரன் 'யாழ். மாவட்டத்தில் புற்றுநோயின் தாக்கமும் அதனை வெற்றிகரமாக எதிர்கொள்ளலும்' எனும் தலைப்பில் உரையாற்றினார். நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை படத்தில் காணலாம்.
(படங்கள்: தமிழரசன்)

# பாதுகாப்பு வலயத்திற்குள் ஐந்து முனைகளால் உட்பிரவேசிக்க இராணுவம் தயாராகிறதா?

கொழும்பு, ஏப்.6

முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் 'மக்கள் பாதுகாப்பு வலயம்' என அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கடற்கரைப் பகுதிக்குள் ஐந்து முனைகளில் ஒரே வேளையில் தாக்குதல்களை நடத்திக்கொண்டு உட்பிரவேசிப்பதற்கு படையினர் தயாராகி இருப்பதாக களமுனைத் தகவல்களை மேற்கோள்காட்டி இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

இது குறித்து மேலும் விவரிக்கப்பட்டுள்ளதாவது:-

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பச்சைப்புல்மோட்டைப் பகுதி கடுமையான மோதல்களைத் தொடர்ந்து கடந்த புதன்கிழமை படையினரால் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பகுதி படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்ததைத் தொடர்ந்து பாதுகாப்பு வலயப் பிரதேசம் படையினரால் முற்றாகச் சுற்றிவளைக்கப்பட்டிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

படையினரின் 58 ஆவது படைப் பிரிவே இந்தப் பகுதியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. சுமார் ஒரு வார காலமாக இடம்பெற்ற கடுமையான மோதல்களையடுத்தே இப்பகுதியை படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

- இப்பகுதியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பதன் மூலம் 58 ஆவது படையணியினர், 53 ஆவது படையணியினருடன் இணைப்பை ஏற்படுத்தியிருப்பதாகவும் படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிலையிலேயே படையினரின் பலம் வாய்ந்த ஐந்து படையணிகள் வன்னியில் பெருந்தொகையான பொதுமக்கள் அடைக்கலம் புகுந்திருக்கும் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் ஐந்து முனைகளினால் பிரவேசிப்பதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

**களமுனைத் தளபதிகளுடன் சனியன்று சந்திப்பு**

இந்த நடவடிக்கையை எவ்வாறு மேற்கொள்வது என்பதையிட்டு களமுனைத் தளபதிகளுடன் முக்கிய ஆலோசனைகளை நடத்துவதற்காகவே இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சனிக்கிழமையன்று அவசரமாக வவுனியாவுக்குச் சென்றிருந்ததாகவும் தெரிகின்றது. களமுனையில் உள்ள முக்கிய மூத்த தளபதிகளும் இராணுத் தளபதியுடனான இந்தச் சந்திப்புக்காக நேற்றுமுன்தினம் அவசரமாக வவுனியாவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இராணுவத் தளபதியுடனான ஆலோசனைகளையடுத்து களமுனைத் தளபதிகள் உடனடியாகவே முல்லைத்தீவுப் பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இவர்களுக்கு முக்கியமான உத்தரவுகளை இராணுவத் தளபதி பிறப்பித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னிப் போர் தீவிரமடைந்த போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த முல்லைத்தீவின் கடற்கரையோரப் பகுதிகளைப் பாதுகாப்பு வலயமாக அறிவித்த ஸ்ரீலங்கா படையினர், பொதுமக்கள் அந்தப் பகுதிக்குச் செல்ல வேண்டும் எனவும் உத்தரவிட்டிருந்தனர். புதுமாத்தளன், அம்பலவன்பொக்கனை, வலைஞர்மடம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய கடற்கரையோரப் பகுதிகளே பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டது. இந்தப் பகுதிக்குள் தற்போது சுமார் மூன்று லட்சம் மக்கள் அடைக்கலம் புகுந்திருப்பதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தின் 55 ஆவது படைப் பிரிவு, 58 ஆவது படைப் பிரிவு, 53 ஆவது படைப் பிரிவு, 59 ஆவது படைப் பிரிவு மற்றும் சிறப்புப் படைப்பிரிவு - 8 என்பன இந்தப் பாதுகாப்பு வலயப் பகுதியைத் தற்போது சுற்றிவளைத்திருப்பதாக படைத்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் படைப் பிரிவுகள் பாதுகாப்பு வலயத்தின் மீது தாக்குதல் ஒன்றை நடத்தி அதற்குள் பிரவேசிப்பதற்குத் தயாராக இருப்பதாக படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்ற போதிலும், இந்த நடவடிக்கை எப்போது மேற்கொள்ளப்படும் என்பது தொடர்பாக எந்தத் தகவலையும் தெரிவிக்கவில்லை.

இருந்தபோதிலும், இந்தப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் மீது விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அண்மைக்காலமாகத் தீவிரமடைந்திருப்பது படையினருடைய திட்டங்களைச் சீர்குலைப்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதாக அமைந்துவிடும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

படையினரின் முன்னரங்க நிலைகளின் மீது கடுமையான தாக்குதல்களைத் தொடுத்துள்ள விடுதலைப் புலிகள், சிறிய குழுக்களாக படையினரால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பகுதிகளுக்குள்ளும் பிரவேசித்து தாக்குதல்களை நடத்திவருகின்றனர் -என்றுள்ளது (அ-1)

## ஷெல், ஹெலித்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

திலையம்பலம் திருச்செல்வம் (வயது 04), சிவதீபன் புஸ்பராணி (வயது 32), குகேந்திரராசா (வயது 46), விஜயரட்ணம் இந்திரராசா (வயது 46), மரியநாயகம் கதீசன் (வயது 21), பாலகுமார் பாதூசன் (வயது 05), மயில்வாகனம் தேவநேசன் (வயது 14), கனியமுதன் கவிஞன் (வயது 16), வைரமுத்து காருண்யன் (வயது 12), வைரவன் துரைசிங்கம் (வயது 42), காந்தி மதியமலர் (வயது 29), கலாதீபன் விதுசனா (வயது 08), தேவன் பவிசா (வயது 09) 80, கண்ணாளன் காவியா (வயது 13), வேணுகாந்தன் யோகாம்பாள் (வயது 40), கலைத்தேவன் ரேணுகா (வயது 35), இன்பநாதன் சின்னராசா (வயது 44), அந்தோனி ஜோசப் மரியநாயகம் (வயது 52), கதிர்வேலு மருதம்மா (வயது 52), கதிரித்தம்பி பவிசனா (வயது 11), நாகமணி துசாந்தன் (வயது 12) ஆகியோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

**பொருள் இறக்கிக்கொண்டிருந்த கப்பல் மீது சூடு**

இதேவேளை மாத்தளன் கடற்பரப்பில் பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த கப்பலை நோக்கி உந்துகணை தாக்குதல் மற்றும் கனரக துப்பாக்கிச்சூட்டுத் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் கரையோரத்தில் நின்ற இரு சிறுவர்கள் உடல் சிதறி படு கொலை செய்யப்பட்டுள்ளதுடன் 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

சத்தியமூர்த்தி குணாளன் (வயது 10), நாகலிங்கம் பாலகிருஸ்ணன் (வயது 16) ஆகிய இரண்டு சிறுவர்களே படுகொலை செய்யப்பட்டுள்ளனர். விமானப்படையின் எம்ஐ - 24 ஹெலி நடத்திய தாக்குதலில் 2 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 15 பேர் படுகாயமடைந்தனர். வைரமுத்து செல்வரத்தினம் (வயது 55), விசுவலிங்கம் கனகரத்தினம் (வயது 65) ஆகிய இருவருமே படுகொலை செய்யப்பட்டவர்களாவர். - என்றுள்ளது.

(அ-1)

# விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படுவது மோசமான ஒடுக்குமுறைக்கு வழிவகுக்கலாம்

## லண்டன் ஆய்வு நிறுவனம் தகவல்

கொழும்பு, ஏப்.6

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்படுவது புதிய, மிக மோசமான ஒடுக்குமுறைக்கு வழிவகுக்கலாம் என லண்டனின் பிரபல வெளிவிவகார ஆய்வு நிறுவனமான 'சத்தாம் ஹவுஸ்' எச்சரித்துள்ளது.

நிலப் பகுதிகளுக்கான மோதல் சந்தேகத்திற்கிடமின்றி மேலும் தீவிர சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுக்கும் என லண்டனின் பிரபல சர்வதேச விவகார ஆய்வு நிறுவனமான ரோயல் நிறுவகத்தின் தலைமையகமான சத்தாம் ஹவுஸின் இணை இயக்குனர் சாரு வொக்த கார்பியனிற்கு தெரிவித்துள்ளார்.

போரிடும் படையணிகள் அழிக்கப்படலாம். எனினும், யுத்தத்தின் முடிவு விடுதலைப் புலிகளின் தாக்கும் பலத்திற்கான முடிவாக அமையாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையின் பல பகுதிகளில் சிறுபான்மையினத்தவர்களின் நிலை குறித்து தாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ள சிறுபான்மை உரிமை அமைப்பின் மோதல் தவிர்ப்பு அதிகாரி கிறிஸ் சீப்மன், மோதல் நடைபெறும் பகுதியில் காணப்படும் மனிதாபிமானப் பேரழிவிற்கு அப்பால், மனித உரிமை மீறல்கள் அதிகரிப்பதற்கான சான்றுகள் கிடைத்திருக்கின்றன எனத் தெரிவித்துள்ளார்.

மோதலிலிருந்து தப்பியோடும் தமிழர்கள் கண்மூடித்தனமாகக் கைது செய்யப்படுதல், காணாமற்போதல் போன்றவை குறித்த தகவல்கள் கிடைக்கின்றன. இராணுவ நடவடிக்கைகளின் முடிவு எவ்வாறானதாக இருந்தாலும், இந்த வகை மனித உரிமை மீறல்கள் நின்று போகமாட்டா என்பதற்கான சான்றுகள் உள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

**சர்வதேச அழுத்தம் தேவை**

வடக்கு, கிழக்கில் இடம்பெறும் பெருமளவு ஆள் கடத்தல், காணாமற்போதல் போன்றவை நிறுத்தப்பட்டு, குற்றவாளிகள் நீதியின் முன்நிறுத்தப்படுவதை உறுதி செய்வதற்கு இலங்கை அரசு மீது சர்வதேச அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

அரசு, தமிழ் பொதுமக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் நடைபெறுவதாக எதனையும் செய்யவில்லையென சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் அனா நெய்ஸ்டன்ட் குற்றம் சாட்டியுள்ளார்.

''மோதலில் சிக்கியுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். இவ்வகையான மனித உரிமை மீறல்கள் தொடர்வதால் சுதந்திர ஊடகங்கள் தொடர்ந்தும் தாக்குதலுக்கு உள்ளாகும்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வவுனியாவில் உள்ள வைத்தியசாலைகளுக்குள் நுழையும் கும்பலொன்று நோயாளிகளைக் கடத்திச் செல்வதாக மனிதாபிமானப் பணியாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் உள்ள நலன்புரி முகாம்களில் பலவந்தமாக கடத்தல் இடம்பெறுகிறது என மாற்றுக்கொள்கைகள் நிலையத்தின் நிறைவேற்று இயக்குநர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து குறிப்பிட்டுள்ளார்.

**நலன்புரி நிலையங்களில் துணை இராணுவக் குழுக்கள்**

தடுப்பு முகாம்கள் போன்று தோன்றும் இராணுவமயப்படுத்தப்பட்ட இடைத்தங்கல் முகாம்கள் அல்லது நலன்புரி முகாம்களின் மோதலிலிருந்து தப்பியோடும் மக்கள் அடைக்கப்படுகின்றனர். தெளிவான மீள் குடியேற்றத் திட்டம் இல்லை. இம்முகாம்களில் துணை இராணுவக் குழுக்கள் செயற்படுகின்றன. விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானவர்கள் இனங்காணப்பட்டு, காணாமற்போகச் செய்கின்றனர்.

2006 ஆம் ஆண்டிலிருந்து அரசு, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆயுதக் குழுக்களைப் பயன்படுத்துகின்றது. இவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து விதிவிலக்களிக்கப்பட்ட நிலையில் செயற்படுகின்றனர் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

அரசு கிழக்கை விடுவித்த வேளை என்ன நடைபெற்றதென்றால், சட்டவிரோத கொலைகள் அதிகளவில் இடம்பெற்றன. உறவினர்கள் காணாமற் போனவர்களின் குடும்பத்தவர்களுக்கு நீதி வழங்கப்படவில்லை. காணாமற் போனவர்களுக்கு என்ன நடைபெற்றது என்பதும் தெரியாது என அதன் இலங்கைக்கான கொள்கை அதிகாரி கொசன்டா பொஸ்டோ குறிப்பிட்டுள்ளார்.

(அ-சி)

# கல்முனையில் துப்பாக்கிச் சூடு; பொலிஸ் உயரதிகாரி பலி

கொழும்பு, ஏப். 6

மட்டக்களப்பு கல்லடி பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் பொலிஸ் அத்தியட்சகர் எச்.எவ்.ஜமாஹின் நேற்று இரவு இனந்தெரியாத ஆயுத தாரிகளால் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கல்முனை மருதமுனை பிரதேசத்தில் அமைந்துள்ள பள்ளிவாசலுக்கு தொழுகைக்காகச் சென்று விட்டு இரவு 7.25 மணியளவில் பொலிஸ் அத்தியட்சகர் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இவரது சடலம் பிரேதப் பரிசோதனைக்காக கல்முனை அஷ்ரப் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

# கண்டியில் தமிழ்ப் பெண் கைது

கொழும்பு, ஏப். 6

கண்டியிலிருந்து தமது சொந்தக் கிராமத்துக்குச் செல்வதற்காக பஸ் நிலையத்தில் நின்ற தமிழ்ப் பெண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கண்டி நகரில் உள்ள ஹன்டல என்ற இடத்தில் ரூபவாஹினித் தொலைக்காட்சி கோபுரத்துக்கு அருகில் உள்ள பஸ் நிலையத்தில் பஸ்ஸுக்காகக் காத்திருந்தபோதே இந்தத் தமிழ்ப் பெண் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவரது நடமாட்டத்தில் சந்தேகம் இருக்கிறது என பொலிஸாருக்கு அப்பகுதி மக்கள் கொடுத்த தகவலைத் தொடர்ந்தே அப்பகுதிக்கு வந்த பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

(அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மக்களின் பிரச்சினையைத் தீர்க்க ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து செயற்படுக!

## ஜனாதிபதியிடம் ரணில் கோரிக்கை

கொழும்பு, ஏப்.6

வடபகுதியில் இடம்பெயர்ந்துள்ள பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் கொல்லப்பட்டிருப்பதைக் கருத்திற் கொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனுடன் இணைந்து வன்னி மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்வர வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

முல்லைத்தீவில் உள்ள இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகளை கையாள்வதில் அரசாங்கம் ஐ.நா.வுடன் இணைந்து செயற்படுவது அவசியம் எனவும் ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் போருக்குள் சிக்குண்டு இடப்பெயர்வுப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர் எனக் குறிப்பிட்ட ரணில் விக்கிரமசிங்க, இதன் விளைவாக பலர் கொல்லப்பட்டுள்ளனர். அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படக் கூடாது என்று பல நாடுகள் கோரிக்கைகளை முன் வைத்து வருகின்றன. அதனால் இந்தப் பிரச்சினை இப்போது அனைத்துலக விவகாரமாகியிருக்கின்றது பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதைத்தான் நாமும் சொல்கின்றோம். ஆனால், அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்படக் கூடாது.

இந்த நிலைப்பாட்டுடனேயே இந்த மக்களின் உயிர்களைப் பாதுகாக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்காக ஐ.நா.வுடன் இணைந்து செயற்படுமாறு அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் நான் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (அ)

## தி.மு.க. வேட்பாளர் பட்டியலில் தயாநிதி மாறனுக்கும் இடம்

இந்திய மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. மதுரைத் தொகுதியில் மு.க.அழகிரியும், பெரம்பலூரில் நடிகர் நெப்போலியனும், ராமநாதபுரத்தில் நடிகர் ரித்தீஷும் போட்டியிடுகின்றனர். முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதி மாறனுக்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. மதிமுகவிலிருந்து தி.மு.கவில் சேர்ந்த எல்.கணேசன், செஞ்சி ராமச்சந்திரன், மு.கண்ணப்பன், கம்பம் ராமகிருஷ்ணன் ஆகியோருக்கு இடம் ஒதுக்கப்படவில்லை.

## வன்னிப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தப்பட்ட பாதுகாப்பு வலயம் தவிர்ந்த வேறு எங்கும் செல்ல முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது-

பிரிகேடியர் நெவில் ரவீந்திர சில்வா தலைமையிலான 58ஆம் படையணியினர் நேற்றுக் காலையுடன் புதுக்குடியிருப்புப் பிரதேசம் முழுவதையும் இராணுவத்தினரின் வசம் கொண்டு வந்தனர் - என்றும் இராணுவத்தளபதி சொன்னார். (அ-06)

## தற்போது..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாறு தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மேலும் கூறியதாவது:-

புலிகளின் தலைவர் பிரபாகரனின் பொய்யான பிரசாரங்களுக்கு ஏமாந்து தப்பான வழியில் சென்ற குழுவினருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லும் செய்தி ஆயுதங்களைக் கைவிட்டு சரண டையுங்கள் என்பதாகும். அதன் மூலம் முல்லைத்தீவில் சிக்குண்டுள்ள பொதுமக் களை விடுவிக்க முடியும்.தற்போது மேற்கொள்ளப்படும் யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரான ஆக்கிரமிப்பு அல்ல -என்றார். (அ-6)

## சீனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், உள்நாட்டு விவசாயிகள் மற்றும் உள்நாட்டு உற்பத்தியை பாதுகாக்கவே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பருப்பு, சீனி, வெங்காயம், உருளைக்கிழங்கு போன்றவற்றின் விலைகள் இதன் காரணமாக அதிகரிக்கவுள்ளன.

புதுவருடத்துக்கு முன்னதாக விலைகளை அதிகரிக்க வேண்டிய நிலையில்உள்ளதாக வர்த்தக சங்கங்கள் தெரிவித்துள்ளன.

## பிரபாகரனைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் சிறு எண்ணிக்கையினரான போராளிகளே மிகக் குறுகிய இடத்தில் தற்போது சிக்கியுள்ளனர் எனவும் அவர்களில் பலர் அரசு அறிவித்துள்ள பாதுகாப்பு வலயப் பகுதிகளிலேயே உள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி மஹிந்த, இன்னும் ஒரு சில மணித்தியாலங்களுக்குள் அல்லது ஒரு நாளுக்குள் இவர்கள் கைது செய்யப்படலாம் அல்லது அழிக்கப்படலாம் எனவும் தெரிவித்தார்.

மேலும், காலம் தாழ்த்தாது விடுதலைப் புலிகளின் தலைவர் சரணடைய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தப்பியோடிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊர்காவற்துறையைச் சேர்ந்த வீரசிங்கம் சதீஸ்வரன் (வயது - 28) என்பவரே தப்பியோட முயற்சித்தார் என சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவத்தின் பின்னர் யாழ். சிறைச்சாலையின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது. (1)

## 500 மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''குறித்த மாணவர்கள் பல்வேறு பரீட்சை மோசடிகளில் ஈடுபட்டனர். அதனாலேயே அவர்களுடைய பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன'' என அவர் மேலும் தெரிவித்தார்.

அவர்களின் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால், குறிப்பிட்ட காலத்துக்குப் பரீட்சைகளில் தோற்றத் தடைவிதிக்கப்படும். சில வேளைகளில் வாழ்நாள் முழுவதும் தடைவிதிக்கப்படும் என அவர் அறிவித்தார்.

## புதுக்குடியிருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் தற்போது பாதுகாப்பு வலயத்திற்குள்ளேயே முடக்கப்பட்டுள் ளனர் என இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்ககார தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று நாள்களில் 420 விடுதலைப் புலிகள்கொல்லப்பட்டுள்ளனர் என்றும் உதய நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு வலயம் மாத்திரமே தற்போது விடுவிக்கப்படாத பகுதியாக உள்ளது என மேலும் குறிப்பிட்டுள்ள அவர் கேணல் தீபன் உட்பட பல இரண்டாம் மட்டத் தளபதிகள் கொல்லப்பட்டனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை புதுக்குடியிருப்பைப் படையினர் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்காக இடம்பெற்ற உக்கிர மோதலில் விடுதலைப் புலிகளின் முன்னணித் தலைவர்களான தீபன், ரூபன், நாகேஷ், கடாபி, துர்க்கா, கமலினி உட்பட 250 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்போது விடுதலைப் புலிகளின் மற்றுமொரு முக்கிய தலைவரான பானு காயமடைந்தார் என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை -

இச் சண்டையில் புலிகளின் முக்கிய உறுப்பினர்களான பீரங்கிப் படையின் தலைவர் மணிவண்ணன் மணலாறுப் பிரதேசப் பொறுப்பாளர் ஆதித்யன் மகளிர் படையணியின் தளபதிகளுள் ஒருவரான விதுஷா ஆகியோரும் கொல்லப்பட்டதாகவும் லோரன்ஸ் காயமடைந்தாகவும் பாதுகாப்பு அமைச்சின் இணையத் தளம் தெரிவித்தது.

புலிகளின் தகவல்களை இடைமறித்துக் கேட்டபோது இது ஊர்ஜிதம் செய்யப்பட்டதாகவும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-6)

## பிரதமரும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழக முதல்வர் கருணாநிதிக்கு பிரதமர் மன்மோகன் சிங்கும், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் கடிதம் எழுதுகிறார்கள். அவர்கள் கடிதம் எழுத வேண்டியது கருணாநிதிக்கு அல்ல, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குத்தான். எத்தனை காலம்தான் நம்மை ஏமாற்றுவார்கள்.

மக்களவைத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நாம் விறுவிறுப்பாகச் செயற்பட வேண்டிய நேரமிது. காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணியை மக்களவைத் தேர்தலில் வெற்றி பெறவிடக் கூடாது. அவர்கள் வெற்றி பெறுவார்களேயானால் தமிழர் உணர்வுக்கு துரோகம் செய்தவர்களாக ஆகிவிடுவோம்.

தேர்தலில் அவர்கள் ரூ. 500 கோடி முதல் ஆயிரம் கோடி வரை செலவு செய்யட்டும். ஆனால், மக்கள் சக்தியின் முன் அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது - என்றார். (அ-சி)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரவித்துள்ளன.

இதேவேளை, பேச்சுகள் சுமுகமாக இடம்பெற்றிருந்தால், இம்மாத இறுதிக்குள் இலங்கைக்கு 48 கோடி டொலர் ஆரம்ப கடனுதவி கிடைக்கலாம் என மேற்குலக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக ஏ.எவ்.பி. மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கை அரசு தசாப்தகால யுத்தத்திற்குப் பின்னர் விடுதலைப் புலிகளை தோற்கடிக்கும் தறுவாயில் உள்ளது போன்று தோன்றுகின்ற அதேவேளை, இந்த இராணுவ நடவடிக்கைகள் நாட்டின் நிதி நிலையில் பாரிய தாக்கமொன்றை ஏற்படுத்தியுள்ளதுடன், சர்வதேச நாணய நிதியத்திடம் கடன்பட வேண்டிய நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது.

இலங்கை முன் ஒருபோதுமில்லாத யுத்தச் செலவு மற்றும் சர்வ தேச நிதி நெருக்கடி என்ற இரட்டை தாக்கங் களுக்குட் பட்டுள்ளதால் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 240 கோடி டொலர் மீட்சி உதவியை பெறவேண்டிய நிலையுள்ளது. இதனை பெறுவதற்கான பேச்சுகள் இடம்பெறுகின்றன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ. நடவடிக்கைக்காக அரசு இவ்வருடம் 1.6 மில்லியன் டொலரை ஒதுக்கியுள்ள பின்னர் சர்வதேச நாணயநிதியத்தின் உதவியை நாடியுள்ளது. அரசு யுத்தத்தை வெல்லும் நிலையுள்ளதாக தெரிவிக்கின்றது.

கடந்த இரு வருடங்களில் அரசு 300 கோடி டொலர்களை செலவழித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது விருப்பத்தின் அடிப்படையிலேயே கடனுதவியை பெறப் போகிறார் எனவும், எந்த வித நிதியுதவிக்காகவும் தாய்நாட்டை அடகு வைக்கவோ அல்லது விற்கவோ போவதில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

எனினும், சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுகளில் ஈடுபட்டுள்ள வட்டாரங்கள் இலங்கை சில கடினமான விட்டுக் கொடுப்புகளை செய்யவேண்டியிருக்கும் எனத் தெரிவித்துள்ளன.

அமெரிக்க டொலரிற்கு எதிராக இலங்கை நாணயத்தை வீழ்ச்சியடைய விடுவது, மானியங்களை நிறுத்துவது, அரச சேவையில் வேலைவாய்ப்புகளைக் குறைப்பது போன்ற நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டியிருக்கும். வட்டி வீதத் தையும் உயர்த்த வேண்டியிருக்கும் என அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

SUPER GRADE ஆசிரியர் குழாமுடன்
(இரு இடங்களிலும்)
O/L DAY CLASS
ஆரம்பம்: 08.04.2009 புதன் காலை 8.00மணி
புதிய அனுமதிகளை இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.
நாவலர் NEC
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். Clock Tower Road, Jaffna

No Hazzle .......... No Fuss.....
Share Two service in one Roof
Computer Sales and Services
உங்கள் கணனிகள் மற்றும் உதிரிப்பாகங்களை திருத்தம் செய்ய அழையுங்கள்
STP Your Partner in IT Solutions
149, Kasthuriar Road. Jaffna. T.P:0212222674, 2228147.

உடனடி வேலைவாய்ப்பு
பிரபல சேவைசார் நிறுவனம் ஒன்றில் உதவியாளர், மேற்பார்வையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
விண்ணப்ப முடிவு திகதி:
08.04.2009
விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
மே/பா: உதயன்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
விளம்பர இல. 3890

அழைக்கின்றோம்
உடுவில் மகளிர் கல்லூரி வழங்கும்
"உயிர்ப்பின் உவகை"
இடம்: கல்லூரி மண்டபம்
காலம்: நாளை (07.04.2009) செவ்வாய்க்கிழமை
நேரம்: பி.ப. 4 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அதிபர்,
உடுவில் மகளிர் கல்லூரி.

பொறுத்திருங்கள் ஏப்ரல் 10இல் (இரு இடங்களில்)
விக்னா
கல்வி நிறுவனம்
தலைமையகம் 52, ஸ்ரான்லி றோட்
கிளை: 417, கே.கே.எஸ். றோட் (யாழ் இந்துக்கல்லூரிக்கு அருகில்)
பிரிவு - I
O/L DAY CLASSES 8.30 -2.00
ஆரம்பம்: 10.04.2009 - 8.30 மணி உங்களின் தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | |
|---|---|
| விஞ்ஞானம் - திரு.தேவா | தமிழ் - திரு. விஜய் |
| கணிதம் - திரு. விக்கி, ரூபன் | கிறிஸ்தவம் - திரு. ஆனந்தராசா |
| ஆங்கிலம் - திரு. விஸ்வநாதன் | புவியியல் - திரு. ஆனந்தன் |
| வரலாறு - திரு. பார்த்திபன் | வர்த்தகம் - திரு. கம்சன் |
| சமயம் - திரு. தரன் | |

* இந்த வருடம் 6 பிரிவுகள் மட்டுமே.
* யாழ். நகரில் 33 வருடகாலம் DAY CLASS சிறப்பாக நடைபெறும் ஒரே நிறுவனம்
* பிரிவு II மிக விரைவில்
* பிரிவு I க்கான அனுமதிகளை இன்று தொடக்கம்பெற்றுக் கொள்ளலாம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.04.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org